12.06.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வேளாண்மைப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்க நாளை கடைசி நாள்**

தமிழகத்தில், வேளாண்மைப் படிப்புகளில் சேர விண்ணப்பங்களை அனுப்ப சனிக்கிழமை (ஜூன் 13) கடைசி நாளாகும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், அதன் இணைப்பு, உறுப்புக் கல்லூரிகளில் இளம் அறிவியல் பிரிவில் வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல் உள்ளிட்ட 6 படிப்புகளும், இளம் தொழில் நுட்பப் படிப்புகளில் உயிர் தொழில் நுட்பவியல், உயிர்த் தகவலியல் உள்ளிட்ட 7 படிப்புகளும் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டுக்கான மாணவர் சேர்க்கைக்கு மே 15ஆம் தேதி விண்ணப்ப விநியோகம் தொடங்கியது. விண்ணப்பங்கள் அனைத்தும் ஆன்லைனிலேயே வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றைப் பெற்று, விண்ணப்பக் கட்டணம் செலுத்தி, பூர்த்தி செய்து ஜூன் 13ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வேளாண்மைப் படிப்புகளில் சேருவதற்காக மொத்தம் 32,328 மாணவ,மாணவிகள் விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவிறக்கம் செய்துள்ளனர். அவர்களில் 27,767 பேர் மட்டுமே கட்டணம் செலுத்தி, படிவங்களைப் பூர்த்தி செய்து அனுப்பியுள்ளனர். கடந்த ஆண்டில் 47,284 விண்ணப்பங்கள் விற்பனை செய்யப்பட்டு, அதில், 31,924 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், இந்தாண்டில், விண்ணப்பங்கள் விற்பனையில் சுமார் 15 ஆயிரம் விண்ணப்பங்கள் குறைந்துள்ளன. விண்ணப்பங்களை பூர்த்தி செய்து வழங்க ஒரு நாள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில் இந்த எண்ணிக்கையில் பெரிய அளவில் மாற்றம்

ஏதும் இருக்காது என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நிறைவு செய்த விண்ணப்பங்களை பெறுவதற்கான கால அவகாசம் ஜூன் 13ஆம் தேதி மாலையுடன் முடிவடையும் நிலையில், ஜூன் 20ஆம் தேதி தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்ட கலந்தாய்வு ஜூன் 29 முதல் ஜூலை 11 வரையும், 2ஆம் கட்ட கலந்தாய்வு ஜூலை 15 முதல் 17ஆம் தேதி வரையிலும் நடைபெறும். ஜூலை 27 இல் கல்லூரிகள் தொடங்கப்படும். தேவைப்பட்டால் 3 ஆம் கட்ட கலந்தாய்வு ஆகஸ்ட் 5ஆம் தேதி முதல் 8ஆம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**தீவனச் செலவுகளை குறைப்பது எப்படி?**



கால்நடை வளர்ப்பு வேளாண்மையுடன் இணைந்த உப தொழிலாக உள்ளது. எனவே, விவசாயிகள் பசுக்களை வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். பசுந்தீவனத்துக்கு அதிக அளவில் விவசாயிகள் செலவிடும் நிலையில், தீவனச் செலவுகளை பல முறைகளில் குறைக்க வாய்ப்புண்டு.

இந்த முறைகளைப் பயன்படுத்தினால், தீவனச் செலவு பெருமளவு குறையும்.

கால்நடைகள் வேளாண்மை உற்பத்திக்கு பல வகைகளில் உதவியும் புரிகிறது. விவசாயிகளின் நிரந்தர வருமானத்துக்கும் ஊட்டச்சத்து மிகுந்த உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யவும் ஆதாரமாக உள்ளது.

இருப்பினும், கால்நடைகளுக்கு தேவையான தீவனத்தின் அளவில் சுமார் 50 சதவீதத்துக்கும் குறைவாகவே கிடைக்கிறது. இதனால் கால்நடைகளின் முழு உற்பத்தித் திறனை பெற இயலவில்லை என கால்நடை மருத்துவர் க.சங்கர் கூறுகிறார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

விவசாயிகள் பேணி காக்கும் கலப்பின கால்நடைகளுக்கு சமச்சீரான சத்துள்ள தீவனத்தை ஆண்டு முழுவதும் கொடுக்க வேண்டியுள்ளது. கால்நடைகளின் பராமரிப்பில் 60-70 சதவீதம் தீவனச் செலவாக உள்ளது. இதை குறைப்பதற்கு உகந்த வழி தீவனப் பயிர்களை வளர்த்து அவைகளுக்கு உரிய அளவில் கொடுப்பதாகும். மக்காச்சோளம், சோளம், தீவனக்கம்பு ஆகிய தானிய வகைகளும், கினியாப்புல், கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் (கோ.3) எருமைப்புல், கொழுக்கட்டைப்புல், தீனாநாத் புல் ஆகிய புல் வகைகளும், முயல் மசால், வேலி மசால், தீவன தட்டைப்பயறு, ஆட்டு மசால், சங்குப்பூ ஆகிய பயறு வகைகளும், சூபாபுல், கிளிரிசீடியா, வாகை, வேம்பு, அகத்தி ஆகிய மர வகைகளும் என 4 வகைகளாக தீவனங்கள் அளிக்கப்படுகின்றன.

எல்லா மண் வகைகளிலும் மழையளவு மற்றும் பாசன வசதி குறைவாக உள்ள இடங்களிலும் தீவன மரங்களை வரப்புகளிலும், தோட்டங்களின் வேலி ஓரங்களிலும் தீவனங்களைப் பயிரிடலாம்.

தானிய வகை, புல் வகை, பயறு வகை தீவனப்பயிர்களை ஊடு பயிர் முறையில் பயிர்செய்வதன் மூலம் கால்நடைகளுக்கு தேவையான முக்கிய ஊட்டச்சத்துக்கள் கிடைக்க வாய்ப்புண்டு.

வறட்சியில் தீவனப் பராமரிப்பு: வறட்சியின்போது தீவனப் பற்றாக்குறை அதிகம் காணப்படுவதால், பெரும்பாலான கால்நடைகள் விற்கப்படுகின்றன. எனவே, அந்தக் காலக்கட்டத்தில் உடைத்த இருங்குச்சோளம், கேழ்வரகு, கம்பு, சாமை, கோதுமை, கொள்ளு ஆகியவற்றை மக்காச் சோளத்துக்குப் பதிலாக 50 சதவீதம் வரை தீவனத்தில் அளிக்கலாம்.

அரிசித் தவிடு, கோதுமைத் தவிடு, அரிசிக்குருணை, உளுந்து, பயறு, கடலை பொட்டு போன்றவற்றை கால்நடை தீவனத்தில் 50 சதவீதம் வரை சேர்க்கலாம். விலை மலிவாக கிடைக்கும் தானிய உபபொருள்களை தீவனத்தில் கலப்பதால் தீவனச்செலவு மிச்சமாவதுடன் சத்துள்ள ஆகாரம் கிடைக்கிறது.

வேளாண் கழிவுப் பொருள்களையும் அளிக்கலாம்! கிழங்கு திப்பி, பருத்திக்கொட்டை, ஓடு நீக்கப்பட்ட புளியங்கொட்டை ஆகியவற்றை உடைத்து தீவனத்தில் சேர்க்கலாம்.

அறுவடைக்குப் பின் கிடைக்கும் வைக்கோல், சோளத்தட்டை, கம்புத்தட்டை, வேர்கடலைக்கொடி, காய்ந்த புல், சூரியகாந்தி செடி, மக்காச்சோளத்தட்டை, கேழ்வரகுத் தட்டை ஆகிய கூளத் தீவனத்தையும் கொடுக்கலாம்.

சத்துகள் குறைந்த இந்த உலர் தீவனங்களை 4 யூரியா கரைசல் தெளித்து சில நாள்கள் காற்றுப் புகாமல் பாதுகாத்து வைப்பதன் மூலம் சத்துள்ள கூளத் தீவனம் கால்நடைகளுக்கு கிடைக்கும். யூரியாவைக் கொண்டு ஊட்டமேற்றிய தீவனத்தை ஆறு மாத வயதைக் கடந்த மாட்டிற்கு 4-5 கிலோ வரை அளிக்கலாம்.

ஆடுகளுக்கு சோளத்தட்டையுடன் காய்ந்த உளுந்தஞ்செடி, துவரைச் செடி, நிலக்கடலைக் கொடி, சவுண்டல், கிளிரிசிடியா, மர இலைகள், கொடுக்காப்புளி, கருவேல் ஆகியன நல்ல உணவாகின்றன. காய்ந்த பயறுவகை தீவனமும் சாலச்சிறந்ததாகும்.

கரும்புச் சோகை, சக்கைகளும் நல்ல உணவு: கரும்புச்சோகை கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தப்படுகிறது. தினசரி 20 - 25 கிலோ வரை அளிக்கலாம். சூரியகாந்தி செடி, விதை நீக்கிய சூரியகாந்திப் பூ ஆகியவற்றை உணவாக வைக்கலாம்.

கருவேல், வேலிக்கருவேல், சவுண்டல் விதைகள், புளியங்கொட்டை, மாங்கொட்டை ஆகியவற்றை தீவனமாகப் பயன்படுத்தலாம். விதைகளை 20 -30 சதவீதம் வரை தீவனத்தில் சேர்க்கலாம்.

மர இலைகள்: மர இலைகள் சத்துள்ள தீவனமாக அமைந்துள்ளது. அகத்தி, சவுண்டல், கிளிரிசிடியா, கொடுக்காப்புள்ளி, வாகை ஆகியவற்றின் இலைகளில் புரத சத்து அதிகமாக உள்ளது. அந்தந்த பகுதிகளில் கிடைக்கும் விச சத்து அற்ற கால்நடைகள் விரும்பி உண்ணும் மர இலைகளை கோடை காலத்தில் அளித்து தீவனப்பற்றாக்குறையை போக்கலாம்.

மர இலைகளுடன் வைக்கோல், சோளத்தட்டை, கம்பந்தட்டை, கேழ்வரகு தட்டை போன்றவற்றையும் கோதுமைத்தட்டையும் சேர்த்து அளிக்க வேண்டும். மர இலைகளை பால் தரும் மாடுகளுக்கு ஒரு நாளைக்கு 10-15 கிலோ வரை அளிக்கலாம். ஆடுகளுக்கு 3 - 3.5 கிலோ வரை ஒரு நாளைக்கு கொடுக்கலாம். மேலும் மர இலைகளையும் கால்நடைகளுக்கு அளிக்கலாம். மர இலைகளை தீவனமாக அளிக்கும் போது கீழ்க்கணட வழிமுறைகளை பின்பற்றவேண்டும்.

மர இலைகளை பிற புல், உலர்ந்த தீவனத்துடன் சிறிது சிறிதாக அளிக்க வேண்டும். மர இலைகளை உலரவைத்து அதன் ஈரப்பதம் 15 -20 கீழே உள்ள நிலைகளில் அளிப்பது சிறந்தது. மர இலைகள் மீது 2 உப்பு அல்லது வெல்லக் கரைசலை தெளித்தால் உண்ணும் திறன் அதிகமாகும். மர இலைகளை விரும்பு உண்ணாத கால்நடைகளை விரும்பி உண்ணும் கால்நடைகளின் அருகில் கட்டி வைத்து மர இலைகளை தீவனமாக அளிக்கலாம்.

முக்கியமான கவனிக்க வேண்டியது..!

மாலை, இரவு நேரங்களில் தீவனமிட்டால் கால்நடைகள் நல்ல முறையில் உண்ணும். வெயில் நேரத்தில் மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது. சுத்தமான குடிநீர் கிடைக்கச் செய்ய வேண்டும். விஷ சத்துள்ள தீவனப் பயிர்களை கால்நடைகளுக்கு கொடுக்கக் கூடாது. தீவனத் தட்டைகளை சிறு சிறு துண்டுகளாக வெட்டி அளிப்பதால் கழிவுகள் குறையும். மழையின்றி வாடும் இளம் சோளப்பயிரில் மாடுகளை விட்டு மேய்க்கக் கூடாது. இளம் சோளப்பயிரில் உள்ள சைனிக் அமிலம் நச்சுத்தன்மை உடையதால் இதனை உண்ணும் கால்நடை இறக்க நேரிடும். முழு தீவனத்தையும் ஒரே நேரத்தில் அளிக்காமல் இரண்டு அல்லது மூன்று தடவை பிரித்து சிறிது சிறிதாக அளித்தல் நல்லது என்றார் சங்கர்.

**நஞ்சில்லாத பஞ்ச கவ்யம்! விவசாயிகளுக்கு வரப்பிரசாதம்**

- புகைப்படங்கள்
- 

ரசாயனப் பொருள்களுக்கு மாற்றாக, தாவரங்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியைத் தரக் கூடிய இயற்கை ஊட்டச்சத்து பஞ்ச கவ்யம். உணவுப் பயிர்களில் அதிகமாக பயன்படுத்தப்பட்டு வரும் செய்கை ரசாயன உரங்கள், பூச்சிகொல்லி மருந்துகளால் உண்டாகும்

நச்சுத்தன்மை இயற்கைக்கு கேடு விளைவிக்கிறது. மேலும், மனிதர்கள் மட்டுமின்றி விலங்குகள், பறவைகள் ஆகியவற்றுக்கும் தீங்கு விளைவிக்கின்றன.

இந்த பேராபத்தில் இருந்து மீள்வதற்கான ஒரே வழி இயற்கையாக கிடைக்கப் பெறும் பசுவின் சாணம், கோமியம், பால், தயிர், நெய், கரும்புச் சாறு, இளநீர், வாழைப்பழம், பதநீர் ஆகிய பொருள்களை முறையாகப் பயன்படுத்தி துளி கூட நஞ்சில்லாமல் தயாரிக்கப்படும் கரைசலான பஞ்ச கவ்யத்தை பயிர்களுக்கு பயன்படுத்துவதுதான். பஞ்ச கவ்யத்தை அனைத்து பயிர்களுக்கும் இலைவழி மூலம் தெளிப்பதால், சத்துகள், நுண்ணுயிர்கள், பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவித்து பூச்சி, நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கி மகசூலை கணிசமாக அதிகரிக்கிறது. நச்சுத்தன்மையற்ற தீங்கற்ற விளைபொருளாகவும் கிடைக்கின்றது. இந்தப் பஞ்ச கவ்யத்தை தயாரிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் ஆரணி கோட்ட உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி கூறியதாவது: பசுவின் புது சாணம்- 5 கிலோ, பசுவின் சிறுநீர் (கோமியம்)- 3 லிட்டர், பசுவின் பால்- 2 லிட்டர், 4. தயிர்- 2 லிட்டர், நெய்- 1 லிட்டர், கரும்புச் சாறு- 3 லிட்டர், இளநீர்- 3 லிட்டர், வாழைப்பழங்கள்- 12 பழங்கள், கள் (இருப்பின்)- 2 லிட்டர், (கரும்புச் சாறு கிடைக்கவில்லையென்றால், 500 கிராம் நாட்டுச் சர்க்கரையை 200 கிராம் ஈஸ்டுடன் 3 லிட்டர் நீரில் ஊறவைத்தால் 30 நிமிடங்களில் கிடைக்கும் கரைசலைப் பயன்படுத்தலாம்) ஆகியன தேவைப்படும் பொருள்கள் ஆகும். தயாரிப்பு முறை: சாணம், சிறுநீர், நெய் ஆகியவற்றை நன்கு கலந்து மூன்று நாள்களுக்கு அடிக்கடி கலக்கி வைக்க வேண்டும். 4-ஆம் நாள் இந்தக் கலவையுடன் இதர பொருள்களான தயிர், நெய், கரும்புச் சாறு, இளநீர் வாழைப்பழங்கள், கள் ஆகியவற்றை கலக்க வேண்டும். தினமும் இந்தக் கலவையை குறைந்தபட்சம் 4 தடவை கலக்கி, 15 நாள்கள் வைத்திருந்து 19-ஆம் நாள் பயிர்களில் தெளிப்பதற்கு

பயன்படுத்தலாம்.

பஞ்ச கவ்ய மூலப் பொருள்களில் உள்ள சத்துகள்: பசும் சாணம்- பாக்டீரியா, பூஞ்சானம், நுண் சத்துகள். கோமியம்-பயிர் வளர்ச்சிக்கு தேவையான தழைச்சத்து, பால் - புரதம், கொழுப்பு, மாவு, அமினோ அமிலம், கால்சியம் சத்துகள். தயிர்- ஜீரணிக்கத்தக்க செரிமானத் தன்மையைத் தரவல்ல நுண்ணுயிர்கள் (லேக்டோபேஸில்லஸ்). நெய்- வைட்டமின் ஏ, பி, கால்சியம் கொழுப்புச் சத்து. கரும்புச்சாறு- சைட்டோகைனின் எனும் வளர்ச்சி ஊக்கி, அனைத்து வகை தாது உப்புக்கள் (மினரல்ஸ்). இளநீர்- நுண்ணுயிர் வளர்ச்சிக்கான இனிப்பு (குளுக்கோஸ்). வாழைப்பழம்- பதநீர் தாது உப்புக்கள் தரவல்லது.

பதநீர், வாழைப்பழம் ஆகிய இரண்டும் நொதிப்பு நிலையை அளித்து அதிக நுண்ணூட்டச் சத்தை உருவாக்குகிறது.

முறையாகத் தயாரிக்கப்பட்ட பஞ்ச கவ்யத்தில் பயிர் வளர்ச்சிக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் உறுதுணையாக விளங்குகின்ற நுண்ணுயிர்களான அசோஸ்பைரில்லம், அசட்டோபேக்டர், பாஸ்போபேக்டிரியா, சூடோமோனாஸ் ஆகியனவும், பேரூட்டச் சத்துகள், நுண்ணுட்டச் சத்துகள், வளர்ச்சி ஊக்கிகள் போன்றவையும் தேவையான அளவில் உள்ளது.

பயிர்களுக்கு பயன்படுத்தும் முறைகள்: முறையாகத் தயாரிக்கப்பட்ட பஞ்ச கவ்யம் 300 மி.லி. மருந்தை 10 லிட்டர் நீரில் கலந்து விசைத் தெளிப்பான் அல்லது கைத் தெளிப்பான் அல்லது வேப்பிலை நொச்சி இலைகளைக் கொண்டு எல்லா பயிர்களுக்கும் இலைவழி தெளிப்பு உரமாக காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்கலாம்.

ஒரு ஏக்கரில் உள்ள பயிருக்கு ஒரு முறை தெளிப்பதற்கு 3 லிட்டர் பஞ்ச கவ்யம் போதுமானதாகும்.

இந்தக் கரைசலை தெளிப்பானில் ஊற்றி பயன்படுத்த வேண்டும். கைத்தெளிப்பானில் வடிக்கட்டியும், விசைத்தெளிப்பானில் வால்வு,

குழாயின் நுனிப்பகுதியை பெரிதாக்கியும் பயன்படுத்தினால் நல்ல முறையில் தெளிக்கலாம். நல்ல பலனும் கிடைக்கும்.

**பொருளாதார வளர்ச்சியில் இந்தியா முன்னிலை: உலக வங்கி**

""வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கான கணிப்பில் இந்தியா முதல் முறையாக தற்போது முன்னிலை வகிக்கிறது" என உலக வங்கி தெரிவித்துள்ளது.

இதன்மூலம், பொருளாதார வளர்ச்சியில் சீனாவை இந்தியா முந்துவது விரைவில் சாத்தியமாகும் என்றும் கூறியுள்ளது.


"சர்வதேச பொருளாதார எதிர்பார்ப்புகள்' என்ற ஆய்வறிக்கையை உலக வங்கி வியாழக்கிழமை வெளியிட்டது. வாஷிங்டனில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சியில் உலக வங்கியின் தலைமை பொருதார நிபுணர் கெüசிக் பாசு பேசுகையில், "உலக வங்கியின் பொருளாதார வளர்ச்சி விகிதப் பட்டியலில், முதல் முறையாக இந்த ஆண்டு 7.5 சதவீத வளர்ச்சி என்ற கணிப்புடன், இந்தியா முன்னிலையில் உள்ளது' என்றார்.

இதுகுறித்து அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: இந்தியாவில் புதிதாகக் கொண்டு வரப்பட்டுள்ள பொருளாதாரச் சீர்திருத்தங்கள், வர்த்தகச் சூழலை மேம்படுத்தி, முதலீட்டாளர்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன. மேலும், புதிய முதலீடுகளையும் கவர்ந்துள்ளன.

இவையெல்லாம், இந்த ஆண்டு இந்தியா 7.5 சதவீத பொருளாதார வளர்ச்சி விகிதத்தை எட்டுவதற்கு உதவும்.

பொருளாதார மந்த நிலையை கவனமாக சமாளித்துக் கொண்டிருக்கும் சீனா, இந்த ஆண்டு 7.1 சதவீத வளர்ச்சியை எட்டுவதற்கு வாய்ப்புள்ளது. வளரும் நாடுகள் இந்த ஆண்டு 4.4 சதவீத வளர்ச்சியை எட்டக் கூடும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செயற்கை மழை: மகாராஷ்டிர அரசு பரிசீலனை**

- புகைப்படங்கள்
- 

மகாராஷ்டிர மாநிலத்தின் வறட்சியான பகுதிகளில், மேக விதைப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செயற்கை மழையைப் பெய்ய வைக்க அந்த மாநில அரசு பரிசீலித்து வருகிறது.

இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் செயற்கை மழையை உருவாக்குவதற்கு, சர்க்கரையை எரிபொருளாகக் கொண்ட ராக்கெட் பயன்படுத்தப்படுகிறது.

இதுகுறித்து மாநில அமைச்சர் ஏக்நாத் கட்ப்ஸ, மும்பையில் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:

மேக விதைப்பு தொழில்நுட்பம் மூலம் செயற்கை மழையை உருவாக்குவதாகக் கூறும் நிபுணர்கள் எங்களை அணுகியுள்ளனர்.

மாநிலத்தின் வறட்சியான பகுதிகளான ஜலேகான், விதர்பா அல்லது மரத்வாடாவில் உள்ள சில கிராமங்களில் செயல்முறை விளக்கம் அளிக்குமாறு அவர்களிடம் கேட்டிருக்கிறோம்.

சோதனை முயற்சி வெற்றியடைந்துவிட்டால், செயற்கை மழையை உருவாக்குவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார் அவர்.

இதைத் தொடர்ந்து, "இண்டர்நேஷனல் ஸ்கூல் ஆஃப் புரொஃபசனல்

ஸ்டடீஸ்' அமைப்பின் இயக்குநர் அப்துல் ரஹ்மான் வானு கூறுகையில், "மகாராஷ்டிர மாநிலத்தின் சிந்துதுர்க், சாங்கிலி ஆகிய பகுதிகளில் இந்த ராக்கெட் தொழில்நுட்பம் சோதித்துப் பார்க்கப்பட்டது; இத்தொழில்நுட்பம் மூலம், பூமியில் இருந்து 45 கிலோ மீட்டர் உயரத்தில் உள்ள மேகத்தைக் குறிவைக்க முடியும்' என்றார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

மேக விதைப்பு தொழில்நுட்ப முறையில், ராக்கெட்டின் முனைப் பகுதியில் வைத்து அனுப்பப்படும் சில்வர் அயோடின், மேகத்தைச் சென்றடைந்தவுடன் வெடிக்கும். இதன் காரணமாக நிகழும் வேதிவினையால் அடுத்த 40-60 நிமிடங்களில் மழை பெய்யும்.

இதற்காக, 47 சதவீத தூய்மையான சில்வர் அயோடின் தேவைப்படுவதால், அதை ஆர்ஜென்டீனாவில் இருந்து இறக்குமதி செய்தாக வேண்டும்.

தூய்மையான சில்வர் அயோடினை இறக்குமதி செய்வதற்கு மாநில அரசிடம் இருந்து சான்றிதழ் பெற வேண்டியுள்ளது. அந்தச் சான்றிதழ் கிடைத்தவுடன், சில்வர் அயோடினை இறக்குமதி செய்து, செயற்கை மழைப்பொழிவை உருவாக்கத் தயாராகிவிடுவோம்.

நவீன தொழில்நுட்ப முறைப்படி, வறட்சியாகக் காணப்படும் பகுதியில் மழைப்பொழிவை ஏற்படுத்துவதற்கு, ஒரு மேகத்தை அதன் இருப்பிடத்தில் இருந்து 80 கிலோ மீட்டர் தொலைவு வரை நகர்த்த முடியும். அதற்கான தொழில்நுட்ப வசதிகள் எங்களிடம் உள்ளன என்றார் அப்துல் ரஹ்மான் வானு.

**கரும்பு விவசாயிகளுக்காக புதிய திட்டங்கள் தேவை: ஜி.கே.வாசன்**

கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில் புதிய திட்டங்களை மத்திய, மாநில அரசுகள் வகுக்க வேண்டும் என்று தமாகா தலைவர் ஜி.கே.வாசன் வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை: கரும்புக்குப் போதிய ஆதார விலை கிடைக்காதது, உரம் விலை ஏற்றம், இயற்கைச் சீற்றம், போதிய தண்ணீர் இன்மை, மின் தட்டுப்பாடு, சரியான பருவத்தில் கரும்பு வெட்டப்படாத சூழல் போன்ற காரணங்களால் கரும்பு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, கரும்புக்கு வருவாய்ப் பகிர்மானக் கொள்கை அடிப்படையில் சரியான விலை நிர்ணயம் செய்ய வேண்டும். நாட்டில் அன்னியச் செலாவணியைச் சேமிக்கும் வகையில் சர்க்கரை தேவை போக உபரி கரும்பிலிருந்து நேரடியாக எத்தனால் உற்பத்தி செய்து, பெட்ரோலில் கலந்து விற்பனை செய்யவும், தனி விவசாயி எளிமையான முறையில் பயன்பெறும் வகையில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை மேம்படுத்தவும் வேண்டும். கரும்பாலைகளில் உற்பத்தியைப் பெருக்கவும், கரும்பு விவசாயிகளுக்கு உரிய நிலுவைத் தொகை முழுமையாகக் கிடைத்திடவும், மத்திய, மாநில அரசுகள் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

**தமிழகம், புதுச்சேரியில் சில இடங்களில் மழைக்கு வாய்ப்பு**

வெப்பச் சலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: வெப்பச் சலனம் காரணமாக, தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் வெள்ளிக்கிழமையும் தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் மழை பெய்யும். கடந்த 24 மணி நேரத்தில், தருமபுரி மாவட்டம் அரூரில் 80 மி.மீ, திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, மயிலாடுதுறையில் 60 மி.மீ, காரைக்கால், சீர்காழியில்

50 மி.மீ, ஆலங்காயம், விருத்தாசலம், செங்கம், கும்பகோணம், பாப்பிரெட்டிப்பட்டி, போளூர், குடவாசல், நன்னிலம், ஊத்தங்கரை ஆகிய இடங்களில் இடங்களில் தலா 40 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

சென்னை மாநகரைப் பொருத்தமட்டில், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில பகுதிகளில், மாலை அல்லது இரவு நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 102, 82 டிகிரி ஃபாரன்ஹீட் ஆக இருக்கும் என்றார்.

**மல்லிகை ஏற்றுமதிக்கு விவசாயிகளுக்கு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்**

மல்லிகை ஏற்றுமதி செய்வதற்கு விவசாயிகளுக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும் என்று மதுரை ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் தெரிவித்தார். மதுரை விற்பனைக் குழுவின்கீழ் மதுரை, திருமங்கலம், உசிலம்பட்டி, வாடிப்பட்டி ஆகிய இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்படுகின்றன. இருப்பினும் இவற்றை விவசாயிகள், வியாபாரிகள் அதிகளவில் பயன்படுத்தவில்லை. எதிர்வரும் அறுவடைக் காலத்தில், விளைபொருள்களின் வரத்து அதிகரிக்கச் செய்யும் வகையில் விவசாயிகள், வணிகர்கள், வேளாண் வணிகத் துறை அலுவலர்கள் பங்கேற்ற முத்தரப்புக் கூட்டம் மதுரை ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

முன்னோடி விவசாயி ராஜமாணிக்கம் பேசுகையில், விவசாயிகள் எளிதில் அணுகும் வகையில் விற்பனைக் கூடங்கள் அமைக்க வேண்டும். தக்காளி, மல்லிகை போன்ற பூ வகைகளை சேமித்து வைக்கும் வகையில் குளிர்பதனக் கிடங்கு வசதி அவசியம் என்றார்.

கட்சிசார்பற்ற விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் பாண்டியன் பேசுகையில், மதுரை மாவட்டத்தில் 60 வகையான விளைபொருள்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இவற்றை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு கொண்டு செல்வதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களை விவசாயிகள் எதிர்கொள்கின்றனர். இதனால், ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் நேரடியாக கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் தேவராஜ்: விளைபொருள்களுக்கான விலை ஏற்ற இறக்கமாக உள்ள சூழலில், விவசாயிகள் உற்பத்திச் செலவுக்குக் கூட வருமானம் கிடைப்பதில்லை. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு வரும் விளைபொருள்களுக்கு அரசே விலை நிர்ணயம் செய்தால் சிறப்பாக இருக்கும்.

பெரியாறு பாசனத் திட்டக்குழு உறுப்பினர் அருள்பிரகாசம்: மதுரையில் ஏற்றுமதித் தரம் மிக்க மல்லிகை சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அதற்கான உதவி கிடைக்கும்பட்சத்தில் குழுவாக இணைந்து சாகுபடி செய்து, ஏற்றுமதி செய்வதற்கு தயாராக உள்ளோம். ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு வரத்து அதிகரிப்பதற்கு, விவசாயிகள் மற்றும் விற்பனைக் கூட அலுவலர்கள் கொண்ட குழுவை அமைக்க வேண்டும்.

மதுரை மாவட்டத்தில் இருபோக சாகுபடி பகுதிகளில் முதல்போக அறுவடை அக்டோபரில் நடைபெறுகிறது. அப்போது, நெல் சேமித்து வைத்துக் கொள்வது விவசாயிகளுக்கு பெரும் பிரச்னையாக இருக்கிறது. இதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும். பருப்பு வியாபாரிகள் சங்க இணைச் செயலர் பி.அறிவரசு:

தமிழகத்தில் பயறு வகைகளின் உற்பத்தி குறைவாகவே உள்ளது. இதனால், வெளிமாநிலங்களில் இருந்து தான் தமிழகத்துக்கு கொள்முதல்

செய்கிறோம். கர்நாடகம், குஜராத் போன்ற மாநிலங்களில் விற்பனைக் கூடங்களில் அனைத்து விளைபொருள்களும் ஒரே இடத்தில் கொண்டு வரப்படுகின்றன. அத்தகைய வசதியை தமிழகத்திலும் ஏற்படுத்த வேண்டும்.

வேளாண் வணிகத் துறை இயக்குநர் செ.மனோகரன்: விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வதற்காக, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயலாற்றி வருகின்றன. இதில் விவசாயிகள் எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்களைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகளுக்குத் தேவையான வசதிகள் செய்துதரப்படும்.

மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன்: பசுமைக்குடில் அமைத்து, தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்வதற்கு அரசு மானியம் அளிக்கிறது. அதில், மல்லிகை சாகுபடி செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும் தேவையான உதவிகள் விவசாயிகளுக்கு செய்துதரப்படும் என்றார்.

**கொடைக்கானலில் மழை**

கொடைக்கானலில் வியாழக்கிழமை மழை பெய்துள்ளதால் பொது மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கொடைக்கானலில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் அவ்வப்போது மழை பெய்து வந்தது. இதனால் குடிநீர் பிரச்னை குறைந்தது. இந் நிலையில் கொடைக்கானலில் ஆண்டு தோறும் ஜூன் மாதம் முதல் தேதியில் பருவ மழை பெய்யும். ஆனால் இந்தாண்டு போதிய மழை பெய்யவில்லை.

இந் நிலையில் வியாழக்கிழமை அதிகாலை முதலே மேகமூட்டம் காணப்பட்டது.பிற்பகலில் ஒரு மணிநேரம் பரவலாக மழை பெய்தது. இந்த மழையால் பொது மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மழையை

நம்பியே உருளை, பீன்ஸ், கேரட் உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

**திருப்புவனத்தில் பலத்த மழை**

திருப்புவனத்தில் பலத்த காற்றுடன் வியாழக்கிழமை இரவு மழை பெய்தது. தமிழகத்தில் தென்மேற்கு பருவ மழை தொடங்கிய நிலையில் கடந்த சில நாள்களாக வெப்பத்தின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. இதனால் பொது மக்கள் அவதிப்பட்டு வந்தனர்.

இந்நிலையில் வியாழக்கிழமை இரவு பலத்த காற்றுடன் திருப்புவனம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மழை பெய்தது. இதனால் கோடை கால பயிர்களை நடவு செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**பாசன வாய்க்காலை சீரமைக்க கோரிக்கை**

திருப்புவனம் அருகே சுமார் 60 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதிக்கான வாய்க்காலை சீரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருப்புவனம் அருகே வல்லாரேந்தல் வருவாய் கிராமத்திற்கு உள்பட்ட கிடாக்குழி கண்மாய் மேலமடை பாசனத்தில் சுமார் 60 ஏக்கர் விவசாய நிலங்கள் இருக்கின்றன.

இந்த நிலங்களுக்கு தண்ணீர் செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள வாய்க்கால் தூர்ந்துப் போய் கிடக்கிறது. இதற்கிடையில் விதிகளை மீறி மண் அள்ளப்பட்டு ஆங்காங்கே மேடுபள்ளங்களாக இருக்கிறது.

இதனால், வாய்க்காலில் தண்ணீர் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வாய்க்காலை சீரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**விருதுநகர் மாவட்டத்தில் 50 கோழிப் பண்ணைகள் அமைக்க திட்டம்**

கோழிப் பண்ணைத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில், தமிழக அரசு 50 சதவீதம் மானியத்துடன் விருதுநகர் மாவட்டத்தில் 50 கோழிப் பண்ணைகள் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இது குறித்து, விருதுநகர் ஆட்சியர் வே. ராஜாராமன் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தமிழக அரசு, கோழி வளர்ப்புத் திட்டத்தினை 2012-13 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் விழுப்புரம், கடலூர், அரியலூர், பெரம்பலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் கறிக்கோழி வளர்ப்புத் தொழில் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

இதன் கீழ், விருதுநகர் மாவட்டத்துக்கு 2015-16 ஆம் ஆண்டுக்கு 50 கறிக்கோழிப் பண்ணைகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், வங்கி கடனுதவியுடன் அல்லது சுயமூலதனம் மூலம் கொட்டகை அமைக்கலாம்.

வங்கி நிதியுதவியுடன் பண்ணைகள் அமைக்க விருப்பமுள்ளவர்களுக்கு, தமிழக அரசின் சார்பில் பண்ணைக்கான கொட்டகைகள் அமைப்பதற்கு ஏற்படும் செலவில் 25 சதவீதம் முன் மானியமாக வழங்கப்படும். இதைத் தவிர, நபார்டு வங்கியின் கோழி துணிகர முதலீட்டு நிதியிலிருந்து 25 சதவீதம் பின் மானியமாக வழங்கப்படும். எனவே, மொத்தம் 50 சதவீதம் மானியம் அரசிடமிருந்து பெறலாம்.

சுயமூலதனம் மூலம் கொட்டகை அமைக்க விருப்பமுள்ள பயனாளிகளுக்கு, தமிழக அரசின் 25 சதவீத மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தில் 5 ஆயிரம் எண்ணிக்கையிலான கோழிகள் கொண்ட பண்ணைகள் அமைக்க மானியம் அளிக்கப்படும்.

**இத்திட்டத்தில், கிராம ஊராட்சியில் வசிக்கும் விவசாயிகள் மற்றும் தனிநபர் தொழில்முனைவோர் ஆகியோர் தேர்வு செய்யப்பட தகுதியானவர்கள். இவர்களிடம் கோழிப் பண்ணை அமைக்க போதிய நிலம் தங்கள் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் பெயரிலோ இருத்தல் வேண்டும். கோழிப் பண்ணையை விரிவாக்கம் செய்திட ஆர்வமுள்ள விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம். ஏற்கெனவே இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளிகள், இந்த நிதியாண்டில் பயன்பெற முடியாது. தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு, தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பயிற்சி மையங்களில் 3 நாள்களுக்கு முறையான பயிற**

**பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயம்: ராகுல் காந்தியை சந்திக்க விவசாயிகள் முடிவு**

பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்வது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தியை சந்திக்க நீலகிரி மாவட்ட சிறு, குறு தேயிலை விவசாயிகள் சங்கம் முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து அச்சங்கத்தின் தலைவர் ஜே.பி.சுப்பிரமணியம் கூறியதாவது:

நீலகிரி மாவட்டத்தில் உள்ள 65 ஆயிரம் சிறு, குறு தேயிலை விவசாயிகள் பசுந்தேயிலை விலை வீழ்ச்சி காரணமாக பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். தற்போது பசுந்தேயிலை கிலோவுக்கு ரூ.7 முதல் ரூ.13 வரை வழங்கப்பட்டு வருகிறது. இதை கிலோவுக்கு ரூ.25 ஆக நிர்ணயம் செய்ய வேண்டும். சென்னை உயர்நீதிமன்றம், சிறு, குறு

விவசாயிகள் சாகுபடி செய்யும் பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலையை நிர்ணயம் செய்ய உத்தரவிட்டுள்ளது. ஆனால், இதுவரை இந்த தீர்ப்பு அமல்படுத்தப்படவில்லை. இதுதொடர்பாக, மத்திய வர்த்தகத்துறை அமைச்சரை சந்திக்க பலமுறை நேரம் கேட்டும் இதுவரை ஒதுக்கவில்லை. இதனால், இம்மாத இறுதியில் தமிழகத்துக்கு வரும் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தியை, முன்னாள் மத்திய அமைச்சர் பிரபு தலைமையில் சந்தித்து இக்கோரிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் பேசுமாறு வலியுறுத்தவுள்ளோம் என்றார்.

**மலை மாவட்ட சிறு விவசாயிகள் நலச்சங்கக் கூட்டம்**

கோத்தகிரியை அடுத்த தூனேரியில் மலை மாவட்ட சிறு விவசாயிகள் நலச்சங்கக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு அச்சங்கத்தின் தலைவர் ஐ.போஜன் தலைமை வகித்தார். ஊர் தலைவர் கிருஷ்ணப்பா, பசுந்தேயிலை முகவர்கள் சங்கத் தலைவர் சிலாக்கியம் துரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: பசுந்தேயிலைக்கு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி குறைந்தபட்ச விலையாக ரூ.30 வழங்க மாவட்ட நிர்வாகமும், தேயிலை வாரியமும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மூடப்பட்டுள்ள கீழ்கோத்தகிரி இண்கோ-4 தேயிலைத் தொழிற்சாலையைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தேயிலை விவசாயிகளுக்கு மைக்ரோ தேயிலைத் தொழிற்சாலைகள் தொடங்கவும், அதற்கு மானியம் வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டத்தில் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ள 37 தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு உடனடியாக உரிமம் வழங்க வேண்டும். குன்னூர் தேயிலை ஏல மையத்தில் இடைத்தரகர்களைத் தவிர்த்து ஆன்லைன் மூலம் ஏலம் நடைபெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**விவசாயிகளுக்கு ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம்**

விவசாயிகளுக்கு மாதம் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வற்புறுத்தியது.

சங்கத்தின் மாவட்ட அலுவலகம் திறப்பு விழா திருவண்ணாமலை கோபால் பிள்ளையார் கோயில் தெருவில் புதன்கிழமை நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் மா.சுப்பிரமணியன் தலைமையில், மாநிலத் துணைச் செயலர் பி.எஸ்.மாசிலாமணி அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

பின்னர் நடைபெற்ற கருத்தரங்கில் மாசிலாமணி பேசியதாவது:

நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க தொடர் போராட்டங்கள் நடத்திவருகிறோம். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைக்க தமிழக அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

60 வயதுக்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு மாதம் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும். கரும்பு விவசாயிகளுக்கு தனியார் சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனே வழங்க வேண்டும். நிலம் கையகப்படுத்தும் அவசரச் சட்டத்தை திரும்பப் பெற மத்திய அரசு முயற்சிக்க வேண்டும் என்றார்.

சங்கத்தின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் இரா.முல்லை, மாவட்டச் செயலர் ப.தி.ராஜேந்திரன், மாவட்டத் துணைத் தலைவர் எஸ்.திருஞானம், மாவட்டத் துணைச் செயலர்கள் இரா.வீரபத்திரன், க.துரைசாமி, மாவட்டப் பொருளாளர் சி.நாராயணசாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**திருந்திய நெல் சாகுபடி செய்ய அறிவுறுத்தல்**

கோடை மழையைப் பயன்படுத்தி திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் பயிரிட நாற்றங்கால் பணிகளை மேற்கொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து, வேளாண் அதிகாரிகள் தெரிவித்தது:

நாமக்கல் மாவட்டத்தில் தற்போது பரவலாக பெய்து வரும் மழையை விவசாயிகள் ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மழையின் ஈரத்தை பயன்படுத்தி, கோடை உழவுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இதனால், நிலத்தில் நீர் இறங்கும் திறன் அதிகரிப்பதோடு, மண்ணில் காற்றோட்டம் ஏற்பட்டு நுண்ணுயிர்களின் செயல்பாடும் அதிகரித்து மண்வளம் கூடும்.

இதனால், கோரை போன்ற களைகள் பெருமளவு கட்டுப்படுத்தப்படுவதோடு, நிலத்தின் அடியில் உள்ள கூண்டுப் புழுக்கள் மேலே கொண்டு வரப்பட்டு அழிக்கப்படுகின்றன.

மேலும், மானாவாரி நிலக்கடலை சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் மழையை பயன்படுத்தி, கோடை உழவு செய்து விதைப்புக்குத் தயார் செய்யலாம்.

ஏற்கெனவே, விதைப்பதற்கு தயாராக உள்ள விவசாயிகள் ஈரத்தை பயன்படுத்தி விதைப்பு செய்யலாம். பசுந்தாள் உரப்பயிர்களான சனப்பு விதைகளை, விதைப்பு செய்து பூப்பூக்கும் முன் மடக்கி உழவு செய்தால் மண் பெருகி, தொடர்ந்து சாகுபடி செய்யும் பயிர்களில் குறிப்பாக குறுவை மற்றும் சம்பா நெற்பயிர்களில் நல்ல மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது.

நீர்வசதி உள்ள குறுவை சாகுபடி செய்யவுள்ள விவசாயிகள், திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி மேற்கொள்ள நாற்றங்கால் பணிகளை மேற்கொள்ளலாம்.

14 நாள்கள் வயதுடைய இளம் நாற்றுகளை மழையின் ஈரத்தை பயன்படுத்தி குறுகியகால நாற்றங்கால் அமைத்து நடவு செய்யலாம். இதனால், நீர் தேவை குறைவதோடு அதிக மகசூல் கிடைக்கும் என்றனர்.

ுசி அளிக்கப்படும். தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் 60 நாள்களுக்குள் கொட்டகை அமைத்தல் வேண்டும்.

தகுதியும், ஆர்வமும் உள்ளவர்கள், மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைப்பாளரின் கடிதம், வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன் வழங்க ஒப்புதல் கடிதம் அல்லது சொந்த நிதிக்கான சான்றுடன் விண்ணப்பங்களை, விருதுநகர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விலையில்லா மரக்கன்றுகள் பெற விவசாயிகளுக்கு அழைப்பு**

கிருஷ்ணகிரி, போச்சம்பள்ளி, ஊத்தங்கரை வட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு வனத் துறையின் சார்பில், விலையில்லா மரக்கன்றுகள் வழங்கப்பட உள்ளன. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என வனத் துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து, கிருஷ்ணகிரி மாவட்ட வனத் துறை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வனவியல் விரிவாக்கக் கோட்டத்தின் மூலம், தமிழ்நாடு உயிர்ப் பண்ணைப் பாதுகாப்பு, பசுமையாக்கல் திட்டத்தின் கீழ், கிருஷ்ணகிரி வருவாய்க் கோட்டத்திற்கு உள்பட்ட கிருஷ்ணகிரி, போச்சம்பள்ளி, ஊத்தங்கரை வட்டங்களில் உள்ள தனியார் பட்டா நிலங்களில் விவசாயிகளுக்கு விரைவில் நிறைந்த பயன் தரக்கூடிய உயர்ரக மரக்கன்றுகள் விலையில்லாமல் வழங்கப்பட உள்ளன.

இதன்படி, தேக்கு, வேங்கை, ஈட்டி, சில்வர்ஓக், மலைவேம்பு, பெருமரம், வேம்பு, புளி, பலா, ஜம்புநாவல், காட்டுநெல்லி, எலுமிச்சை, முருங்கை போன்ற மரப் பயிர்களை விலையில்லாமல் ஒரு ஏக்கருக்கு 200 வீதம் அதிகபட்சமாக 2,500 மரக் கன்றுகள் வரை நடவு செய்து கொடுக்கப்பட உள்ளது.

இதற்கு பட்டா அல்லது கணினி சிட்டா நகல், குடும்ப அட்டை நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 2 ஆகியவை தேவை. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மரம் நடவு செய்ய ஆர்வம் உள்ள விவசாயிகள் அனைவரும் சம்பந்தப்பட்ட அலுவலர்களைத் தொடர்பு கொண்டு உரிய ஆவணங்களை விரைவில் கொடுத்துப் பயன் பெறலாம்.

மேலும், விவரங்களுக்கு வனவியல் விரிவாக்க அலுவலரை 04343 - 293016 என்ற தொலைபேசி எண்ணிலும், 86955 - 58503 என்ற எண்ணில் வனவரையும், 94428 -25159 என்ற எண்ணில் தொழில்நுட்ப உதவியாளரையும் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உலர்தீவன கிடங்கு அமைக்க அரசு ரூ. 5 லட்சம் நிதி ஒதுக்கீடு**

திருச்சி மாவட்டம், தண்டலைப்புத்தூர் கால்நடை மருந்தகத்தில் உலர்தீவன கிடங்கு அமைக்க அரசு ரூ. 5 லட்சம் நிதி ஒதுக்கீடு அளித்துள்ளது என்றார் ஆட்சியர் கே.எஸ். பழனிச்சாமி.

திருச்சி மாவட்டம், முசிறி வட்டத்துக்குள்பட்ட தண்டலைப்புத்தூர் கால்நடை மருந்தகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், உலர்தீவன விற்பனையையும், புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டத்தையும் தொடங்கி வைத்து அவர் பேசியது :

கால்நடை தீவனப் பற்றாக்குறையைப் போக்க தமிழக அரசு உலர்தீவன விற்பனை திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் மூலம் 2013-14-ம் ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் 14,550 விவசாயிகளின் 56,513 கால்நடைகள் பயனடைந்துள்ளன.

நிகழாண்டிலும் ஒரு கால்நடைக்கு நாள் ஒன்றுக்கு 3 கிலோ வீதம் 7 நாள்களுக்கு 21 கிலோ வைக்கோல் கிலோ ரூ. 2 என்ற விலையில் வழங்கப்படவுள்ளது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 5 கால்நடைகள் என்றளவில் வைக்கோல் வழங்கப்படும்.

இதே போல, புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டம் மூலம் நிகழாண்டில் 221 ஆதிதிராவிடர் இன பயனாளிகளுக்கும், 219 இதர பயனாளிகளுக்கும் மானிய விலையில் கோழிக்குஞ்சுகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு பயனாளிக்கும் ரூ. 2,250 மதிப்பில் இத்திட்டப் பலன்கள் வழங்கப்படும் என்றார் ஆட்சியர் கே.எஸ். பழனிச்சாமி.

கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ராஜமாணிக்கம், துணை இயக்குநர் வி. வரதராஜன், முசிறி வட்டாட்சியர் மலர்க்கொடி மற்றும் அரசுத் துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**மத்திய அரசுக்கு கரும்பு உற்பத்தியாளர் சங்கம் நன்றி**

கரும்பு விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்க முன்வந்துள்ள மத்திய அரசுக்கு கோத்தாரி சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

அரியலூரில் இச்சங்கத்தின் கூட்டம் தலைவர் வாரணவாசி ராஜேந்திரன் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழக கரும்பு விவசாயிகளுக்கு தனியார் ஆலைகள் வழங்க வேண்டிய நிலுவைத் தொகை சுமார் 1000 கோடி உடனே வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய, மாநில அரசுகளின் கவனத்துக்கு சர்க்கரை உற்பத்தியாளர்கள் சங்கம் கொண்டு சென்றது. அந்தக் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு, நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு ரூ. 6000 கோடி வட்டியில்லா கடன் வழங்க முடிவு செய்துள்ளதையடுத்து

இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு (சிப்பா) சார்பில் மத்திய அரசுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இக்கூட்டத்தில்,சிப்பா அமைப்பின் சார்பில், மத்திய அரசு அறிவித்துள்ள சலுகைகள் அனைத்தும் விவசாயிகளுக்கு நேரடியாக கிடைக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்திற்கு சங்கத்தின் நிர்வாகிகள் கண்ணதாசன்,விஜயகுமார், குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**நாட்டுக்கோழிப் பண்ணை அமைக்க ரூ. 59.80 லட்சம் ஒதுக்கீடு: ஆட்சியர்**

கரூர் மாவட்டத்தில் நிகழாண்டில் நாட்டுக்கோழிப் பண்ணை அமைக்க ரூ. 59.80 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 2015-16-ம் நிதியாண்டில் கரூர் மாவட்டத்தில் 160 அலகுகள் நாட்டுக்கோழிப் பண்ணைகள் அமைக்க ரூ. 59.80 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் இத்திட்டம் கடந்த ஆண்டு (2013-14) ரூ. 82.98 லட்சத்திலும், 2014-15-ல் ரூ. 60 லட்சத்திலும் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் நாட்டுக்கோழி வளர்ப்புக்கு (ஒரு அலகுக்கு 250 கோழிக்குஞ்சுகள்) தமிழக அரசு சார்பில் 25 சதவீத மானியமும், நபார்டு வங்கி மூலம் கோழிக்கான முதலீட்டு நிதியில் இருந்து 25 சதவீத மானியமும் என மொத்தம் 50 சதவீத மானியம் வழங்கப்பட உள்ளது.

மீதமுள்ள 50 சதவீதத்தை பயனாளிகள் தனது சொந்த செலவிலோ அல்லது வங்கியில் இருந்தோ கடனாகவோ பெற்றுக் கொள்ளலாம். சொந்த செலவில் பண்ணை அமைப்பவர்களுக்கு தமிழக அரசின் 25 சதவீத மானியம் மட்டும் வழங்கப்படும்.

நபார்டு வங்கி மானியம் பெற வங்கியில் இருந்து கடன் பெற்றிருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விவசாயிகள், தனிநபர், தொழில்முனைவோர், சுய உதவிக்குழுவினர் ஆகியோர் தகுதியானவர்கள். மேற்கண்டவர்களிடம் கோழிப் பண்ணை அமைப்பதற்கான போதிய நிலம் தங்கள் பெயரிலோ அல்லது குடும்ப

உறுப்பினர் பெயரிலோ இருத்தல் வேண்டும். கோழி வளர்ப்பில் முன் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் ஏற்கெனவே கொட்டகை அமைத்த பயனாளிகள் புதிய கொட்டகை அமைத்து பண்ணையை விரிவாக்கம் செய்ய ஆர்வமுள்ளவர்களும் இத்திட்டத்தில் சேரலாம்.

தேர்வு செய்யப்படுவோருக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மையம் மூலம் 3 நாட்களுக்கு கோழி வளர்ப்பு முறை குறித்து பயிற்சியளிக்கப்படும்.

இத்திட்டத்தில் 33 சதவீதம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் தேர்வு செய்யப்பட உள்ளனர். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புபவர்கள் விண்ணப்பம் அளிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**குமரி அரசுப் பழப்பண்ணையில் ரூ. 1.55 லட்சத்துக்கு மாங்காய் ஏலம்**

கன்னியாகுமரி அரசுப் பழப்பண்ணையில் ரூ. 1 லட்சத்து 55 ஆயிரத்துக்கு மாங்காய் ஏலம் விடப்பட்டது.

கன்னியாகுமரியில் தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமான பழப்பண்ணை 31.65 ஏக்கரில் அமைந்துள்ளது. இங்கு பல வகை மாங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டு ஏலம் விடப்படுகிறது. நிகழாண்டு ஏலம் நாகர்கோவில் தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் சிவகுமார், உதவி இயக்குநர் (நடவுப் பொருள்கள்) அசோக் மேக்ரின், குமரி பழப்பண்ணை மேலாளர் திலீப் உள்ளிட்டோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் நாகர்கோவில் தொல்லவிளையைச் சேர்ந்த குமார் என்பவர் ரூ. 1 லட்சத்து 55 ஆயிரத்துக்கு ஏலம் எடுத்தார். கடந்த ஆண்டு ரூ. 2 லட்சத்து 77 ஆயிரத்து 777-க்கு ஏலம் போன நிலையில் நிகழாண்டு ரூ. 1 லட்சத்து 22 ஆயிரத்து 777 குறைவாக ஏலம் போனது குறிப்பிடத்தக்கது.

**மீன்வளத் துறை வளர்ச்சிப் பணிகள்: ஆட்சியர் ஆய்வு**

தூத்துக்குடி மாவட்டத்தில் மீன்வளத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் ம. ரவிகுமார் வியாழக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் மீன்வளத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சியர் ம. ரவிகுமார் வியாழக்கிழமை ஆய்வு செய்தார். தூத்துக்குடி அருகேயுள்ள சக்கம்மாள்புரத்தில் செயல்பட்டுவரும் தனியார் அலங்கார மீன் பண்ணையை அவர் பார்வையிட்டார்.

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திடம் இருந்து 25 சதவீதி மானியத்துடன் ரூ. 8 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட இந்த மீன் பண்ணையில் 100 மீன்வளர்ப்புத் தொட்டிகள் பராமரிக்கப்பட்டு, 60 வகையான சிக்லிட் இன அலங்கார மீன்கள் வளர்க்கப்படுகின்றன.

இந்தப் பண்ணையில் வளர்க்கப்படும் அலங்கார மீன்கள் கொல்கத்தா, மும்பை, கொச்சின், பெங்களூரு மற்றும் ஆந்திரம் உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. இதையடுத்து, மாரமங்கலம் கிராமத்தில் பொன்ராஜ் என்பவருக்கு சொந்தமான மீன்விதைப்பண்ணையை ஆட்சியர் பார்வையிட்டார்.

இதுகுறித்து பொன்ராஜ் கூறுகையில், கடந்த 4 ஆண்டுகளாக நன்னீர் மீன்வளர்ப்பில் ஈடுபட்டுவருவதாகவும் 2012-2013 ஆம் ஆண்டில் தரமான மீன்குஞ்சுகள் ஆண்டு முழுவதும் கிடைத்திடும் நோக்கத்துடன், தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டத்தின் கீழ் மீன்விதைப்பண்ணையை அமைத்ததாகவும் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, மீன்வளத் துறை இணை இயக்குநர் அமல்சேவியர், உதவி இயக்குநர்கள் ஐசக் ஜெயக்குமார், சிவகுமார்,

மீன்வளத்துறை ஆய்வாளர்கள் விஜயராகவன், அன்ட்ரிபிரின்ஸி வைலா, சுற்றுலா அலுவலர் சீனிவாசன், மக்கள் தொடர்பு அலுவலர் கு. தமிழ்செல்வராஜன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் சி.குமார், தே.ராம்குமார் உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

**கரும்பு நிலுவைத் தொகை விவசாயிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும்**

கரும்பு விவசாயிகளுக்கு மத்திய அரசு வழங்கியுள்ள நிலுவைத் தொகை தமிழக விவசாயிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் தி.வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

நிகழாண்டில் கரும்புக்கான கொள்முதல் விலையை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.6 ஆயிரம் கோடியை வட்டியில்லாத கடனாக வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைகள் கடந்த ஆண்டே விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை ரூ.500 கோடிக்கும் அதிகமாக உள்ளது. கடந்த ஆண்டும் மத்திய அரசு இதேபோல் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக ரூ.6 ஆயிரம் கோடியை சர்க்கரை ஆலைகளுக்கு வட்டியில்லாத கடனாக வழங்கியிருந்தது.

ஆனால், சர்க்கரை ஆலைகளோ மத்திய அரசிடம் இருந்து இந்தத் தொகையைப் பெற்றுக் கொண்டு தங்களது பிற தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்துவிட்டு விவசாயிகளுக்கான நிலுவைத் தொகையை வழங்கவில்லை. இந்த ஆண்டு இதற்கு மத்திய அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

இந்த நிலுவைத் தொகை முழுமையாக சென்றடைகிறதா என்பதை மத்திய அரசு தனியார் சர்க்கரை ஆலைகளை கண்காணித்து உறுதி

செய்ய வேண்டும் என அந்த அறிக்கையில் தி.வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தமிழகத்திற்குகூடுதலாக கோதுமை ஒதுக்கீடு**

சென்னை மற்றும் மாவட்ட தலைநகரங்களில், ஒரு ரேஷன் கார்டுக்கு, 10 கிலோ; மற்ற இடங்களில், ஐந்து கிலோ கோதுமை, ஒரு கிலோ, 7.50 ரூபாய் என்ற விலையில் விற்கப்படுகிறது. ரேஷன் கடைகளில் வினியோகம் செய்ய மாதந்தோறும், 13,780 டன் கோதுமை தேவை. இதை, மத்திய அரசு, ஒதுக்கீடு செய்கிறது. இந்நிலையில், கூடுதலாக கோதுமை ஒதுக்கீடு செய்யும்படி, மத்திய அரசுக்கு, தமிழக அரசு கோரிக்கை விடுத்தது. அதனால், முதற்கட்டமாக, மத்திய அரசு, கூடுதலாக, 3,000 டன்கோதுமையை ஒதுக்கீடு செய்து உள்ளது.- நமது நிருபர் -

**இடியுடன் கூடியமழை பெய்யும்**

சென்னை:'தமிழகத்தில், அடுத்த 24 மணி நேரத்தில், ஒரு சில இடங்களில் மழை பெய்யும். சென்னையில், இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.மழை பதிவு (செ.மீட்டரில்): கடந்த, 24 மணி நேரத்தில், அரூர் (தர்மபுரி) - 8; திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை (திருவாரூர்), மயிலாடுதுறை (நாகப்பட்டினம்) - 6; காரைக்கால் - 5; ஆலங்காயம் (வேலூர்), விருத்தாசலம் (கடலூர்), செங்கம் (திருவண்ணாமலை), பெருகொண்டாபுரம், ஊத்தங்கரை (கிருஷ்ணகிரி), கும்பகோணம்

(தஞ்சாவூர்) - 4; இது தவிர, வட மற்றும் தென் மாவட்டங்களில், 1 - 3 செ.மீ., வரை மழை பதிவாகி உள்ளது.

**பூச்சிக்கொல்லி மருந்து கலந்த காய்கறிகள் மற்ற மாநில முதல்வர்களுடன் பேச முடிவு**

நாகர்கோவில்:பூச்சிக்கொல்லி மருந்து அளவுக்கு அதிகமாக கலந்த காய்கறிகள் விவகாரத்தில் மற்ற மாநில முதல்வர்களுடன் பேசுவதற்கு கேரள அரசு முடிவு செய்துள்ளது. முதல்வர் உம்மன்சாண்டி தலைமையில் துறை அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.தமிழ்நாடு உட்பட வெளிமாநிலங்களில் இருந்து அனுப்பப்படும் காய்கறிகளில் விஷத்தன்மை அதிகமாக இருப்பதாக கேரளா தரப்பில் கூறப்பட்டு வந்த நிலையில், தோட்டக்கலைதுறை சார்பில் அதிகாரிகள் குழுவினர் தமிழ்நாட்டில் காய்கறிகள் உற்பத்தியாகும் இடங்களில் ஆய்வு நடத்தினர்.

பின்னர் அவர்கள் அளித்த அறிக்கையின் பேரில் கேரள உணவு பாதுகாப்புத்துறை ஆணையர் அனுபமா, தமிழக வேளாண்பொருள் உற்பத்திதுறை ஆணையர் ராஜேஷ் லக்கானிக்கு எழுதிய கடிதத்தில், பூச்சிக்கொல்லி மருந்தின் பயன்பாட்டை கட்டுப்படுத்தப்படாத பட்சத்தில் அது இருமாநில மக்களையும் கடுமையாக பாதிக்கும் என்று கூறியிருந்தார்.மேலும் ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து வந்த பழங்களிலும் சிலவற்றில் பூச்சிக்கொல்லி மருந்து அதிகம் இருப்பதாக கூறப்பட்டது.

இது தொடர்பாக திருவனந்தபுரத்தில் மொத்த வியாபாரிகள் கூட்டம் கூட்டப்பட்டது. தொடர்ந்து முதல்வர் உம்மன்சாண்டி தலைமையில் இது தொடர்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் சுகாதாரத்துறை அமைச்சர் சிவகுமார், சிவில் சப்ளைத்துறை அமைச்சர் அனுப்ஜேக்கப் மற்றும் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.இதில் ஜூலை முதல் வாரத்தில் மற்ற மாநில உணவு-

விவசாயத்துறை செயலாளர்கள் கூட்டத்தை கூட்டவும், தொடர்ந்து மற்ற மாநில முதல்வர்களுக்கு முதல்வர் உம்மன்சாண்டி கடிதம் எழுதவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பின்னர் நிருபர்களிடம் அமைச்சர் சிவகுமார் கூறியதாவது: உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகளின் சோதனையை மேலும் வலுப்படுத்த 2.45 கோடி ரூபாய் செலவில் நவீன உணகரணங்கள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. விவசாய பல்கலை கழகத்தில் 708 பொருட்கள் ஆய்வு செய்யப்பட்ட போது 63 பொருட்களில் கடும் ஆபத்தை ஏற்படுத்தும் விஷம் இருந்தது. 418 காய்கறிகள் பரிசோதிக்கப்பட்ட போது 28-ல் விஷம் இருந்தது. அரசு தொடர்ந்து சோதனை நடத்தும். உணவு பாதுகாப்பு தொடர்பான வழக்குகளை விரைந்து விசாரிக்க தனி கோர்ட் அமைக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## மேட்டூரில் நீர் திறப்பு அதிகரிப்பு

சேலம் : குடிநீர் தேவைக்காகவும், நிலத்தடி நீர் மேம்பாட்டிற்காகவும் மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்படும் நீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. அணையிலிருந்து விநாடிக்கு 2000 கனஅடி நீர் திறந்து விடப்படுகிறது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில வாரங்களாக மழை பெய்து வருவதால் மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்பட்டு வந்த நீரின் அளவு விநாடிக்கு 1000 கனஅடியாக குறைக்கப்பட்டிருந்தது.

## உணவு நிறுவனங்களுக்கு புதிய உத்தரவு

புதுடில்லி : உணவு பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் 6 மாதங்களுக்கு ஒருமுறை தங்கள் தயாரிப்புக்களின் பரிசோதனை அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ.,) உத்தரவிட்டுள்ளது. மேகி நூடுல்ஸ் விவகாரத்தை அடுத்து உணவு நிறுவனங்களுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## விற்பனை கூடத்தில் விளை பொருட்களை விற்க நடவடிக்கை




மதுரை:"மதுரையில் நடப்பு பருவம் முதல் ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம் வேளாண் விளை பொருட்களை விற்கப்படும்," என வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குனர் மனோகரன் தெரிவித்தார்.மதுரையில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை குடோன்களில் வரத்து அதிகரித்தல் பற்றிய விவசாயிகள், வணிகர்கள், விற்பனைக்குழு அதிகாரிகளின் முத்தரப்பு கூட்டம் இயக்குனர் மனோகரன் தலைமையில் நடந்தது. கலெக்டர் சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார்.விவசாய சங்க நிர்வாகி ராஜமாணிக்கம்: ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம் விளை பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். பூக்கள், பழங்களுக்கான குளிரூட்டப்பட்ட குடோன் தேவை. மேலூரில் விற்பனை கூடம் அமைக்க இடம் தேர்வாகி உள்ளது. விரைவில் பணியை துவக்க வேண்டும்.விற்பனைக்குழு செயலாளர் தவசுமுத்து: திருமங்கலத்தில் 25 மெட்ரிக் டன் அளவுக்கு விளை பொருட்களை பாதுகாக்க குளிரூட்டப்பட்ட குடோன் உள்ளது. அதை விவசாயிகள் பயன்படுத்தவில்லை.

விவசாய சங்க நிர்வாகி தேவராஜ்: கூட்டுறவு வேளாண் சங்கங்களில்

விவசாய கடன் தர மறுக்கின்றனர். பொருளீட்டு கடன் வழங்கினால் விளை பொருட்களின் உற்பத்தியை அதிகப்படுத்த முடியும். கமிஷன் கடைகளில் விளை பொருட்களை விற்றால் மூன்று மாதம் கடந்து தான் பணம் கிடைக்கும். உற்பத்தி விலையை அரசே நிர்ணயம் செய்ய வேண்டும். போக்குவரத்து செலவு, ஏற்றுக்கூலி, வாகன வாடகை என விவசாயிகளுக்கு 10 சதவீதம் முன்பணம் தர வேண்டும். பருப்பு மில் உரிமையாளர் அறிவரசு: பரவை காய்கறி மார்க்கெட்டிற்கு சேலத்தில் இருந்து கூட காய்கறிகள் வரத்து உள்ளது. எனவே விளை பொருட்களை ஒரே இடத்தில் அமைத்தால் விவசாயிகள், வியாபாரிகள் பலனடைவர். விவசாய சங்க நிர்வாகி பாண்டியன்: விவசாயிகளுக்கும், வேளாண் துறைக்கும் இடைவெளி உள்ளது. முன்பு சிவசண்முகம் என்ற விவசாய அதிகாரி, விவசாயிகளுடன் நேரடி தொடர்பு வைத்திருந்தார். தேவையான உதவிகளை உடனுக்குடன் செய்தார். அவருக்கு பின் இடைவெளி நீண்டு விட்டது. இதை தவிர்க்க மாதந்தோறும் முத்தரப்பு கூட்டம் நடத்த வேண்டும். டி.கல்லுப்பட்டி ஒன்றியத்தில் சிறுதானியம், பயிறு வகைககள் அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கு விற்பனை கூடம் இல்லை. நீர் நிலை பயன்படுத்துவோர் சங்க தலைவர் முருகன்: திருமங்கலம் குளிரூப்பட்ட குடோனுக்கு வியாபாரிகளை, வேளாண் அதிகாரிகள் வரவழைத்து விளை பொருட்களை விற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விளை பொருட்களை தனித்தனியாக பிரித்து கொள்முதல் செய்ய வேண்டும்.

கலெக்டர்: மேலூரில் விற்பனை கூடம் அமைக்கும் பணி துரிதப்படுத்தப்படும். உசிலம்பட்டியில் குளிரூட்டப்பட்ட கட்டடம் அமைக்க அரசுக்கு பரிந்துரைக்கப்படும். விவசாயிகளின் ஆரம்ப கட்ட

செலவுக்கு குறிப்பிட்ட தொகை வழங்க அரசுக்கு பரிந்துரைக்கப்படும். இயக்குனர் மனோகரன்: மதுரை, திருமங்கலம், உசிலம்பட்டி, வாடிப்பட்டி ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் சொந்த கட்டடங்களில் செயல்படுவதால் உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளன. விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களுக்கு விற்பனை செய்ய கொண்டு வரும் விளை பொருட்களை குவியல் வாரியாக அடுக்கி வைத்து, அவற்றை வியாபாரிகள் பார்வையிட்டு மறைமுக ஏல முறையில் வணிகர்கள் விளை பொருட்களுக்கு அதிகபட்ச விலையினை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும். நடப்பு பருவம் முதல் ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம் வேளாண் விளை பொருட்கள் விற்கப்படும், என்றார்.கூடுதல் கலெக்டர் ரோஹிணி, இணை இயக்குனர்கள் முகமது இக்பால், சாரநாத்பாபு, தனி அலுவலர் மூர்த்தி, கலெக்டர் நேர்முக உதவியாளர் வடிவேல்குமார் கலந்து கொண்டனர்.

## ரூ.6.50 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்:நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், 500 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,369, குறைந்த பட்சம், 3,847 ரூபாய், ஆர்.சி.எச்., ரகம் அதிக பட்சம், 4,292 குறைந்த பட்சம், 3,765 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 500 மூட்டை பருத்தி, 6.50 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.விருதுநகர், ராஜபாளையம்,

திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு ஆகிய பகுதியைச் சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

**அரூரில் பலத்த மழை விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி:அரூர், பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் பெய்த கன மழையால், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தர்மபுரி மாவட்டத்தின், பல்வேறு பகுதிகளில், கோடை மழை பெய்தது. ஆனால், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் கோடை மழை எதிர்பார்த்த அளவு பெய்யாதது, இப்பகுதி மக்கள் மத்தியில் ஏமாற்றத்தை அளித்தது. இந்நிலையில், கோடை முடிந்த நிலையில், பகல் நேரங்களில், வெயில் கொளுத்தி வந்தது. அவ்வப்போது வானில் ஏற்படும் மழை மேகங்களை கண்டு, இன்று மழை பெய்யும் என, மக்கள் நினைத்த, போதும், மழை மக்களை ஏமாற்றி வந்தது.

இந்நிலையில், தர்மபுரி உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. இதனால், குளுமையான கால நிலை ஏற்பட்டது. மேலும், மாவட்டத்தில், அதிகபட்சமாக, அரூரில், 78.20 மில்லிமீட்டர் மழையளவு பதிவானது. பாப்பிரெட்டிப்பட்டியில், 41.10 மி.மீ., கலெக்டர் அலுவலகம், 3 மி.மீ., பாலக்கோடு, 2.30 மி.மீ., தர்மபுரி, 1 மி.மீ., மழையளவு பதிவானது.
கோடை மழை ஏமாற்றிய நிலையில், நேற்று முன்தினம் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் கன மழை பெய்ததால், இப்பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இடியுடன் மழையால் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பல இடங்களில், நேற்று முன்தினம் இரவு, இடியுடன் கன மழை பெய்தது. மாவட்டத்தில் அதிகபட்சமாக பெனுகொண்டாபுரத்தில், 42 மில்லி மீட்டர் மழை பதிவானது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நேற்று முன்தினம் காலை முதல் வெயில் வாட்டி வதைத்தது. இந்நிலையில் திடீரென இரவு, 10.30 மணியளவில் இடி, மின்னலுடன் லேசாக பெய்ய துவங்கிய மழை, சிறிது நேரத்தில் கன மழையாக பெய்ய ஆரம்பித்தது. இதனால் சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதுடன், சாக்கடை கால்வாயில் இருந்து கழிவு நீர் தெருக்களில் தேங்கி நின்றது.

கிருஷ்ணகிரி, போச்சம்பள்ளி, பெனுகொண்டாபுரம், ஊத்தங்கரை சுற்றுவட்டார பகுதியில் குறிப்பிடத்தக்க வகையில் மழை பெய்தது. மழையால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.நேற்று காலை நிலவரப்படி மாவட்டத்தில், பல்வேறு இடங்களில் பெய்த மழை அளவு விவரம்:பெனுகொண்டாபுரம், 42 மி.மீ., ஊத்தங்கரை, 36.2, போச்சம்பள்ளி, 10, கிருஷ்ணகிரி 8.2, ஓசூர், 8, பாரூர், 6.2, நெடுங்கல், 5.4, சூளகிரி 4, தேன்கனிக்கோட்டை, 3 மி,மீ., மழை பதிவானது. சராசரியாக மாவட்டம் முழுவதும், 10.25 மில்லி மீட்டர் மழை பதிவானது.

## சிறு தேயிலை விவசாயிகளுக்கும் உபாசி பங்களிப்பு அவசியம்

குன்னுார்:'சிறு தேயிலை விவசாயிகளுக்கும் உபாசி தனது பங்களிப்பை செயல்படுத்த வேண்டும்' என, தெரிவிக்கப்பட்டுள்ளது.தேயிலை தொழிலை ஊக்குவிக்க, தேயிலை வாரியம் சார்பில், 12வது திட்டத்தின்

கீழ், 100 சதவீத மானியத்துடன் கூடிய புதிய சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான அறிமுக கூட்டம், நேற்று முன் தினம் குன்னுார் உபாசி அரங்கில் நடந்தது. கூட்டத்தில் துணை இயக்குனர் (வளர்ச்சி) ஹரிபிரகாஷ் வரவேற்றார். 12வது திட் டங்கள் குறித்து, வளர்ச்சி அலுவலர் செல்வி பிரபா, புதிய திட்டங்கள் குறித்து தொழிற்சாலை வழிகாட்டி அலுவலர் ராகேஷ் தளுரு பேசினர். தொடர்ந்து தேயி லை மேம்பாடு குறித்த விளக்கப்படம் காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்து தேயிலை வாரிய முன்னாள் துணைத்தலைவர் ரங்கையா, உபாசி தேயிலை கமிட்டி தலைவர் ஜெயராமன் பேசினர்.கூட்டத்தில், தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் பேசியதாவது: தொழிற்சாலை அதிபர்கள், சிறு தேயிலை உற்பத்தியாளர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், வாங்குபவர்கள், விற்பர்கள் என அனைவரிடமும் ஒற்றுமை வேண்டும். அப்போதுதான் தேயிலை தொழில் சிறப்பாக செயல்பட முடியும். தேயிலை அதிபர்களுக்காக மட்டுமே செயல்படும் உபாசி, நம் நாட்டில், 50 சதவீதம் தேயிலையை வழங்கும் சிறுதேயிலை விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்பாடுகளை கொண்டு வர வேண்டும்.

நீலகிரியில் பல இடங்களிலும் உள்ள கடைகளில் சாயம் கலந்த கலப்பட தேநீர் விற்பனை செய்யப்படுகிறது. பொதுமக்களிடம் இதுகுறித்த விழிப்புணர்வு ஏற்பட்டு அனைவரும் தேயிலை வாரியத்துக்கு தகவல் கொடுத்து, இதனை கட்டுப்படுத்த முழு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆண்டுதோறும் தேயிலை வளர்ச்சி அதிகமாக உள்ள மூன்று மாதங்களில் தேயிலையை முழுமையாக கொடுத்து விடுகின்றனர். பசுந்தேயிலை அதிகம் வளரும் காலகட்டங்களில் முதிர்ந்த இலைகளை தோட்டத்திலேயே இடுவதால், உரமாக பயன்பட்டு உற்பத்தியும்

அதிகரிக்கும். கொழுந்து மட்டுமே கொடுத்தால், தேயிலை கலப்படம் இல்லாமல் இருக்கும். இவ்வாறு அம்பலவாணன் பேசினார்.கூட்டத்தில், துணை இயக்குனர் பகலவன் பேசுகையில், "இந்த ஆண்டில் சிறு தேயிலை விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ஸ்மார்கார்டு, ஆதார் கார்டுடன் இணைக்கப்பட உள்ளது. இதேபோல, 30 பேர் மட்டுமே வர்த்தகர்களாக இருந்த நீலகிரியில் தற்போது அகில இந்திய அளவில் வாங்குவதற்கான வர்த்தர்கள் அதிகரித்துள்ளனர். கடந்த ஐந்து ஆண்டுகளில், மைக்ரோ தொழிற்சாலை, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு திட்டங்கள் வகுக்கப்பட்டதால் மற்றவர்களும் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளன," என்றார்.

**விவசாயிகள் கூட்டத்தில் கேரள அரசுக்கு கண்டனம்**

கூடலூர்:மருந்து தெளித்த காய்கறிகளை அனுப்புவதாக கேரள அரசு கூறுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கூடலூர் அனைத்து விவசாயிகள் சங்கத்தினர் தீர்மானம் நிறைவேற்றினர்.கூடலூர் அனைத்து விவசாயிகள் சங்கக்கூட்டம் தலைவர் ஹரிகரன் தலைமையில் நடந்தது. துணைத்தலைவர் செங்குட்டுவன், செயலாளர் முருகன், துணைச் செயலாளர் வீருபாப்பு ஆகியோர் முன்னிலை வகித்தனர். பெரியாறு அணை அருகே புதிய அணை கட்டுவதற்கு கேரள அரசு எடுத்து வரும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. மேலும் தமிழகத்தில் இருந்து அனுப்பும் காய்கறிகள் அதிகமாக மருந்து தெளிக்கப்பட்டதாக உள்ளது என கேரளா கூறியதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது உள்ளிட்ட நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.பொருளாளர் சங்கப்பன், துணைப்பொருளாளர் கர்ணன், செயற்குழு உறுப்பினர்கள் கண்ணன், ஈஸ்வரன், ஆசைக்காளை, இப்ராகிம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**பூச்சிக்கொல்லி மருந்து கலந்த காய்கறிகள் அண்டை முதல்வர்களுடன் பேச கேரளா முடிவு**

நாகர்கோவில்: பூச்சிக்கொல்லி மருந்து அளவுக்கு அதிகமாக கலந்த காய்கறிகள் விவகாரத்தில் அண்டை மாநில முதல்வர்களுடன் பேசுவதற்கு கேரள மாநில அரசு முடிவு செய்துள்ளது. முதல்வர் உம்மன்சாண்டி தலைமையில் துறை அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. தமிழ்நாடு உட்பட வெளிமாநிலங்களில் இருந்து அனுப்பப்படும் காய்கறிகளில் விஷத்தன்மை அதிகமாக இருப்பதாக கேரளா தரப்பில் கூறப்பட்டு வந்த நிலையில், தோட்டக்கலைதுறை சார்பில் அதிகாரிகள் குழுவினர் தமிழ்நாட்டில் காயற்கறிகள் உற்பத்தியாகும் இடங்களில் ஆய்வு நடத்தினர். பின்னர் அவர்கள் அளித்த அறிக்கையின் பேரில் கேரள உணவு பாதுகாப்புத்துறை ஆணையர் அனுபமா, தமிழக வேளாண்பொருள் உற்பத்திதுறை ஆணையர் ராஜேஷ் லக்கானிக்கு எழுதிய கடிதத்தில், பூச்சிக்கொல்லி மருந்தின் பயன்பாட்டை கட்டுப்படுத்தப்படாத பட்சத்தில் அது இருமாநில மக்களையும் கடுமையாக பாதிக்கும் என்று கூறியிருந்தார். இது தொடர்பாக திருவனந்தபுரத்தில் மொத்த வியாபாரிகள் கூட்டம் கூட்டப்பட்டது. தொடர்ந்து முதல்வர் உம்மன்சாண்டி தலைமையில் இது தொடர்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இதில் சுகாதாரத்துறை அமைச்சர் சிவகுமார், சிவில் சப்ளைத்துறை அமைச்சர் அனூப்ஜேக்கப் மற்றும் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதில் ஜூலை முதல் வாரத்தில் அண்டை மாநில உணவு-விவசாயத்துறை செயலாளர்கள் கூட்டத்தை கூட்டவும், தொடர்ந்து அண்டை மாநில முதல்வர்களுக்கு முதல்வர் உம்மன்சாண்டி கடிதம் எழுதவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பின்னர் நிருபர்களிடம் அமைச்சர் சிவகுமார் கூறியதாவது: உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகளின் சோதனையை மேலும் வலுப்படுத்த

2.45 கோடி ரூபாய் செலவில் நவீன உணகரணங்கள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. விவசாய பல்கலை கழகத்தில் 708 பொருட்கள் ஆய்வு செய்யப்பட்ட போது 63 பொருட்களில் கடும் ஆபத்தை ஏற்படுத்தும் விஷம் இருந்தது. 418 காய்கறிகள் பரிசோதிக்கப்பட்ட போது 28-ல் விஷம் இருந்தது. அரசு தொடர்ந்து சோதனை நடத்தும். உணவு பாதுகாப்பு தொடர்பான வழக்குகளை விரைந்து விசாரிக்க தனி கோர்ட் அமைக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகளுக்கு ரூ.6 ஆயிரம் கோடி வட்டி இல்லா கடன்'' மத்திய மந்திரி பஸ்வான் தகவல்**



பாட்னா

விவசாயிகளுக்கு ரூ.6 ஆயிரம் கோடி வட்டியில்லா கடன் வழங்கப்படும் என்று மத்திய மந்திரி ராம்விலாஸ் பஸ்வான் கூறினார்.

<u>வட்டியில்லா கடன்</u>

மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத்துறை மந்திரி ராம்விலாஸ் பஸ்வான் நேற்று பாட்னாவில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்க ரூ.6 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. 'வேளாண் கடன் வினியோக திட்டத்தின்' கீழ், வட்டி இல்லாமல் கடன் பெறலாம். இந்த வட்டியை மத்திய அரசே ஏற்றுக்கொள்ளும்.

நில மசோதா

நிலம் கையகப்படுத்துதல் மசோதா, நில உரிமையாளர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும். நிலத்தை விற்பவர்களுக்கு சந்தை விலையைப் போல், 4 மடங்கு விலை அளிக்கப்படும். அந்த நிலங்களில் தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு, வேலைவாய்ப்பும் அளிக்கப்படும்.

நரேந்திர மோடி அரசை ஏழைகளுக்கு விரோதமானது என்று கூறுவது தவறு. இந்த ஆட்சியில்தான், ஜன்தன் யோஜனா, அடல் பென்சன் யோஜனா, பீமா யோஜனா, முத்ரா வங்கி போன்ற திட்டங்கள் ஏழைகளுக்காக கொண்டுவரப்பட்டுள்ளன.

அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற அத்தியாவசிய பொருட்களின் விலை கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது. பருப்பு, சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளது உண்மைதான். இறக்குமதி மூலம், அதன் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கலப்படத்தை தடுக்க..

இந்த ஆட்சியில் சிறுபான்மையினர் தாக்கப்படுவதாக கூறப்படுவது தவறு. எந்த மத கலவரமும் நடக்கவில்லை. சிறுபான்மையினர் பாதுகாப்பாக உள்ளனர். மோடி அரசை தாக்குவதற்காக, எதிர்க்கட்சிகள், தேவையின்றி மதவாத பிரச்சினையை கையில் எடுத்துள்ளன.

ஊழலற்ற, ஒளிவுமறைவற்ற அரசை அளித்து வருகிறோம். கருப்பு பணத்தை மீட்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மத்திய–மாநில உறவு சுமுகமாக உள்ளது. மத்திய வரி வருவாயில் மாநிலங்களுக்கான பங்கை 32 சதவீதத்தில் இருந்து 42 சதவீதமாக உயர்த்துமாறு 14–வது நிதி கமிஷன் விடுத்த சிபாரிசை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

பாக்கெட் உணவு பொருட்களில் கலப்படத்தை தடுக்க கலப்பட உணவுப்பொருள் தடை சட்டத்தில் முக்கிய திருத்தங்கள் கொண்டுவர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. விரைவில் இதற்கான மசோதா தயாரிக்கப்பட உள்ளது.

இவ்வாறு ராம்விலாஸ் பஸ்வான் கூறினார்.

**விவசாயிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்து பயிற்சி வகுப்பு**



தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டம் குறித்த பயிற்சி வகுப்பு மாவட்டத்தில் உள்ள 8 ஒன்றியங்களிலும் இன்று (வெள்ளிக்கிழமை) நடக்கிறது. அதன்படி காலை 11 மணிக்கு காரிமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும், மற்ற 7 ஊராட்சி ஒன்றியங்களில் மாலை 3 மணிக்கும் இந்த பயிற்சி வகுப்புகள் நடக்கிறது. இதில் 2015-16-ம் ஆண்டு கால்நடை பராமரிப்புத்துறையினரால் செயல்படுத்தப்பட உள்ள அரசு

மானியத்துடன் கூடிய நாட்டுக்கோழி வளர்ப்புத்திட்டத்தில் பயன்பெற பயனாளிகள் விண்ணப்பிக்கலாம். இதில் முன்னோடி வங்கி அலுவலர்கள், ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர். முதலில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் பயனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இந்த பயிற்சி வகுப்பில் தர்மபுரி மாவட்ட கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கலெக்டர் விவேகானந்தன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**மாவட்டம் முழுவதும் பரவலாக மழை விவசாயிகள் மகிழ்ச்சி**



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை முதல் வெயில் வாட்டி வதைத்தது. இந்த நிலையில் திடீரென இரவு சுமார் 10.30 மணியளவில் இடி, மின்னலுடன் லேசாக பெய்ய தொடங்கிய மழை, சிறிது நேரத்தில் கன மழையாக பெய்ய ஆரம்பித்தது. இதனால் சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சாக்கடை கால்வாயில் இருந்து கழிவு நீர் தெருக்களில் தேங்கி நின்றது. மேலும் கிருஷ்ணகிரி, போச்சம்பள்ளி, பெனுகொண்டாபுரம், ஊத்தங்கரை சுற்றுவட்டார பகுதியில் நல்ல மழை பெய்துள்ளது. இந்த திடீர் மழையால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். குறிப்பாக நேற்று முன்தினம் மாலை

கிருஷ்ணகிரி மாவட்டம் பெனுகொண்டாபுரம் பகுதியில் கன மழை கொட்டி தீர்த்தது. அத்துடன் அந்த பகுதியில் குளிர்ந்த காற்று வீசியதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நேற்று காலை 8 மணி நிலவரப்படி பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:- பெனுகொண்டாபுரம் -42, ஊத்தங்கரை -36.2, போச்சம்பள்ளி -10, கிருஷ்ணகிரி -8.2, ஓசூர் -8, பாரூர் -6.2, நெடுங்கல் -5.4, சூளகிரி -4, தேன்கனிக்கோட்டை -3, என மொத்தம் 123 மில்லி மீட்டர் மழை பதிவானது. சராசரியாக மாவட்டம் முழுவதும் 10.25 மில்லிமீட்டர் மழை பதிவானது.

**ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாய விளை பொருட்களை 180 நாட்கள் வரை பாதுகாக்க ஏற்பாடு வேளாண் வணிகத்துறை இயக்குநர் தகவல்**


மதுரை

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாய விளை பொருட்களை 180 நாட்கள் வரை பாதுகாத்து வைத்து நல்ல விலைக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வேளாண் வணிகத்துறை இயக்குநர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

கூட்டம்

மதுரை மாவட்ட ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்கு விளைபொருட்கள் வரத்தை அதிகரித்தல் தொடர்பாக வணிகர்கள்,

விவசாயிகள், வேளாண் வணிகத்துறை அலுவலர்களுடனான முத்தரப்பு கூட்டம் மதுரை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் செ.மனோகரன் தலைமை தாங்கி பேசியதாவது:-

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகள் தங்களது விளை பொருட்களை உலர வைக்க உலர்கள வசதியும், தரம்பிரிக்கும் வசதியும் உள்ளது. விவசாயிகள் தங்களது விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காத காலங்களில் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் இருப்பு வைத்து விளைபொருட்களின் மொத்த மதிப்பில் பாதி தொகையை பொருளீட்டுக் கடனாகப் பெறலாம். முதல் கட்டமாக 120 நாட்களுக்கும், மேற்கொண்டு அனுமதியின்பேரில் மேலும் 60 நாட்களுக்கும் என மொத்தம் 180 நாட்கள் வரை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விளை பொருட்களை இருப்பு வைத்துக்கொள்ளலாம்.

விற்பனைகுழு

பொருளீட்டுக்கடன் பெற தேவையில்லாதோர், குறைந்த வாடகையில் (குவிண்டாலுக்கு நாள் ஒன்றுக்கு 10 பைசா வீதம்) விளைபொருட்களை பாதுகாப்பாக இருப்பு வைத்துக்கொள்ளலாம். விளைபொருட்களின் பாதுகாப்பு கருதி அனைத்து கிட்டங்கிகளுக்குமாக ரூ.6 கோடி மதிப்பிற்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு இன்சூரன்ஸ் வசதி மற்றும் இருப்பு வைக்கும் விளைபொருட்களை பூச்சி தாக்குதலில் இருந்து பாதுகாக்க மருந்து அடித்தல் ஆகிய செலவினங்களை மதுரை விற்பனைக்குழு ஏற்றுக்கொள்கிறது. மேலும், ஒரு ஆண்டில் ஒரு மெட்ரிக் டன் அளவுக்கு கூடுதலாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வைத்து விளைபொருள் விற்பனை செய்யும் விவசாயியை உழவர் நலத்திட்ட உறுப்பினராக்கி அதற்கான சந்தா தொகையினை விற்பனைக்குழுவே செலுத்தி வருகிறது. ஒழுங்கு

முறை விற்பனை கூடத்திற்கு விவசாயிகள் வந்து செல்வதற்கு பஸ் வசதி செய்துதரப்படும். விவசாயிகள், வணிகர்கள் மேலும் கூடுதல் விபரங்களுக்கு 04522533940 என்ற தொலைபேசி எண்ணில் மதுரை விற்பனைக்குழு செயலாளரைத் தொடர்புக்கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

அதிக விலை

கூட்டத்திற்கு கலெக்டர் சுப்பிரமணியன் முன்னிலைவகித்து பேசும் போது, மதுரை, திருமங்கலம், உசிலம்பட்டி மற்றும் வாடிப்பட்டி ஆகிய 4 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் சொந்த கட்டிடங்களில் செயல்பட்டு வருவதால் போதிய உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளன. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு அதிகபட்ச விலையினை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும். விற்பனையாகும் விளைபொருட்களுக்கு அன்றைய தினமே வணிகர்களால் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படும். விவசாயிகள் தங்களது விளைபொருட்களை இடைத்தரகர்களை தவிர்த்து நேரடியாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் மூலம் விற்பனை செய்வதால் இடைத்தரகர்களுக்குத் தரவேண்டிய கமிஷன் தொகை மிச்சமாகும். மதுரை மல்லிகை பூவை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அனைத்து ஏற்பாடுகளும் உடனடியாக செய்யப்படும் என்றார்.

கூட்டத்தில் கூடுதல் கலெக்டர் ரோணிராம்தாஸ், வேளாண்மை இணை இயக்குநர் முகம்மது இக்பால், செய்திமக்கள் தொடர்பு அலுவலர் செந்தில், மதுரை விற்பனைக்குழு தனி அலுவலர் மூர்த்தி, செயலாளர் தவசுமுத்து உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 14 காசுகள் உயர்வு 393 காசுகளாக நிர்ணயம்**



நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 14 காசுகள் உயர்ந்து, 393 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

முட்டை விலை உயர்வு

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 379 காசுகளாக இருந்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை 14 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 393 காசுகளாக உயர்ந்துள்ளது.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:- சென்னை-405, ஐதராபாத்-367, விஜயவாடா, தனுகு-362, பார்வாலா-342, மும்பை-406, மைசூர்-401, பெங்களூரு-395, கொல்கத்தா-385, டெல்லி-351.

காரணம் என்ன ?

ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் கோடை வெப்பம் காரணமாக அதிக அளவில் முட்டைக்கோழிகள் இறந்தன. இதனால் இந்திய அளவில் முட்டை உற்பத்தி குறைந்து உள்ளது. அதேசமயம் முட்டையின் தேவை அதிகரித்து இருப்பதால், பிற மண்டலங்களில் முட்டை விலை 'கிடுகிடு' என உயர்ந்து வருகிறது. அதற்கு தகுந்தாற்போல் நாமக்கல்

மண்டலத்திலும் முட்டை விலை உயர்த்தப்பட்டு வருவதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

கறிக்கோழி கிலோ ரூ.96-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.4 குறைக்க முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.92 ஆக குறைந்து உள்ளது. முட்டைக்கோழி கிலோ ரூ.69-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

**ராமேசுவரம் மீனவர்கள் வலையில் அதிக அளவில் சிக்கிய 'காரல்' மீன்கள்**



ராமேசுவரத்தில் இருந்து நேற்றுமுன்தினம் 650–க்கும் மேற்பட்ட படகுகளில் 2600–க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்று நேற்று காலை கரை திரும்பினார்கள்.இந்த மீனவர்கள் வலையில் காரல் மீன்கள் அதிக அளவில் சிக்கின.ஒவ்வொரு படகிலும் சராசரியாக சிறிய வகை காரல் மீன்கள் 100 கிலோவில் இருந்து 500 கிலோ எடை வரை காரல் மீன்கள் கிடைத்திருந்தன.இந்த மீன்கள் அனைத்தும்

கேளராவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.இதுபற்றி ராமேசுவரம் விசைப் படகு மீனவர் சங்க பிரதிநிதி சேசுராஜா கூறியதாவது:– வழக்கமாக மீன் பிடித்து வரும் ராமேசுவரம் மீனவர்களுக்கு காரல் மீன்கள் வழக்கமாக மிகவும் குறைந்த அளவில் தான் கிடைக்கும்.ஆனால் நேற்று மீன் பிடித்து கரை திரும்பிய மீனவர்களின் ஒவ்வொரு படகிலும் சராசரியாக 100 கிலோவில் இருந்து 500 கிலோ வரையிலும் காரல் மீன்கள் கிடைத்தன.கேராளவில் தற்போது மீனவர்கள் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதால் காரல் மீன்கள் அனைத்துமே கேராளவிற்கு தான் அனுப்பப்படுகின்றன.காரல் மீன்களை தமிழகத்தில் யாரும் சாப்பிடுவது இல்லை.ஆனால் கேரளாவில் காரல் மீன்களை தண்ணீரில் சுத்தமாக கழுவி உப்பு அதிகம் சேர்த்து நன்கு ஊற வைத்து சமைத்து சாப்பிடுகின்றனர்.1 கிலோ காரல் மீனின் விலை ரூ.10–ல் இருந்து 15 வரை விலை போகின்றன.இவ்வாறு அவர் கூறினார்.

**கன்னடியன் கால்வாயை தூர்வார விரைவில் நடவடிக்கை விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் உதவி கலெக்டர் தகவல்**



கன்னடியன் கால்வாயை தூர்வார விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சேரன்மாதேவியில் நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் உதவி கலெக்டர் விஷ்ணு கூறினார்.

குறைதீர்க்கும் கூட்டம்

சேரன்மாதேவி பகுதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் சேரன்மாதேவியில் நடந்தது. கூட்டத்துக்கு உதவி கலெக்டர் விஷ்ணு தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் கன்னடியன் கால்வாய் கடைமடை பகுதி வரை தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

உதவி கலெக்டர்

அதற்கு பதில் அளித்து உதவி கலெக்டர் விஷ்ணு பேசும் போது கூறியதாவது:–

கலெக்டரும், நானும் கன்னடியன் கால்வாய் பகுதி கடைசி வரை சென்று பார்வையிட்டோம். உடனடியாக கால்வாயை தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும். இடை இடையே புதிதாக சில பாலங்கள் கட்டவும் மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இரவு நேரத்தில் விவசாய பயிர்களை மாடுகள் மேய்ந்து நாசம் செய்வதை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். போலி உரங்களை விற்பனை செய்யும் கடைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு உதவி கலெக்டர் விஷ்ணு பேசினார்.

5 பேருக்கு பட்டா மாறுதல்

கூட்டத்தில் அம்மா மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 3 பேருக்கு தலா ரூ.10 ஆயிரம் மானியத்துடன் வழங்கப்பட்டது. மேல ஆலடியூர் கிராமத்தில் 5 பேருக்கு பட்டா மாறுதல் உத்தரவு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் தாசில்தார்கள் பால்துரை (அம்பை), ஜெயம் வெள்ளத்துரை

(நாங்குநேரி), ஷேக் அப்துல் காதர் (ராதாபுரம்), உதவி கலெக்டரின் நேர்முக உதவியாளர் ஜெஸ்டின் ஜெபராஜ், வேளாண்துறை உதவி இயக்குனர்கள் சுந்தரம் (அம்பை), முருகேசன் (ராதாபுரம்), நாங்குநேரி வட்டார வளர்ச்சி அலுவலர் ராணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**ஆமணக்கின் தேவை ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது கலெக்டர் மதிவாணன் பேச்சு**



ஆமணக்கின் தேவை ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது என்று கலெக்டர் மதிவாணன் கூறினார்.

வயல்விழா

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் ஒன்றியம் வெள்ளக்குடி ஊராட்சியில் வேளாண்மைத்துறை மற்றும் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் வீரிய ஒட்டு ஆமணக்கு செடிகள் அறிமுகம் மற்றும் வயல் விழா நடந்தது. விழாவிற்கு மாவட்ட கலெக்டர் மதிவாணன் தலைமை தாங்கினார். விழாவில் கலெக்டர் மதிவாணன் கூறியதாவது:- ஆமணக்கு உற்பத்தி செய்யும் நாடுகளிலேயே இந்தியா பரப்பளவிலும், உற்பத்தியிலும் முதலிடத்தில் உள்ளது. ஆமணக்கு சாகுபடியில் உலக பரப்பளவில் 59 சதவீதமும், உலக உற்பத்தியில் 81 சதவீதமும் இந்தியாவில் உள்ளது. இந்தியாவில் 13.17 லட்சம் எக்டேரில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு 21.77 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டு

வருகிறது. தமிழ்நாட்டில் குறிப்பாக சேலம், நாமக்கல், ஈரோடு, தருமபுரி, பெரம்பலூர் மாவட்டங்களில் 15 ஆயிரம் எக்டேரில் சித்திரை, ஆடி, ஐப்பசி பட்டத்தில் ஆமணக்கு பயிரிடப்பட்டு வருகிறது. ஆமணக்கில் 50 சதவீதத்திற்கு மேலாக எண்ணெய் சத்து இருப்பதால் மிக முக்கிய எண்ணெய் வித்து பயிராக ஆமணக்கு கருதப்படுகிறது. இதிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் 200-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆமணக்கின் தேவை ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்து கொண்டு வருவது மட்டுமில்லாமல் அதன் விலை சீராகவும் நிலையாகவும் உயர்ந்து கொண்டு வருகிறது.

நோய் தாக்குதல்

ஆமணக்கு பயிரினை உளுந்து, பச்சைபயிறு, பருத்தியுடன் ஊடு பயிராகவும், கலப்பு பயிராகவும் பயிரிட்டு கூடுதல் லாபம் அடைவதோடு மட்டுமின்றி பூச்சி மற்றும் நோய் தாக்குதலையும் குறைத்து அதிக பலன் அடையலாம். ஆகவே ஆமணக்கிற்கு இந்திய சந்தையில் நிலையான மதிப்பு இருப்பதால் சராசரியாக ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வரை லாபம் பெறலாம். இதனால் சராசரி மகசூல் திறன் அதிகரிக்கவும், செடிகள் சாயாது, காய்கள் வெடிக்காத தன்மை கொண்டதாகவும், குறைவான வயது உடையதால் மானவாரிக்கும் பாசனநீர் பற்றாகுறைகள் உள்ள பகுதிக்கும் ஏற்றது. மேலும் குறைவான தத்துப்பூச்சி, வெள்ளை ஈ தாக்குதலில் இருந்து விடுபெறலாம். ஆகவே விவசாயிகள் வீரிய ஒட்டு ஆமணக்கு பயிரில் நிறைந்து லாபம் பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ரவி, தஞ்சாவூர் மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலைய தலைவர் செங்குட்டுவன், ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய தலைவர் மாணிக்கம், நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் பாஸ்கரன், நீடாமங்கலம்

வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**தண்டலைப்புத்தூர் ஊராட்சியில் ரூ.5 லட்சத்தில் உலர்தீவன விற்பனை மைய கிடங்கு கலெக்டர் திறந்து வைத்தார்**



தண்டலைப்புத்தூர் ஊராட்சியில் ரூ.5 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட உலர்தீவன விற்பனை மைய கிடங்கை கலெக்டர் பழனிச்சாமி திறந்து வைத்தார்.

<u>உலர்தீவன விற்பனை மைய கிடங்கு</u>

திருச்சி மாவட்டம் முசிறி அருகே உள்ள தண்டலைப்புத்தூர் ஊராட்சியில், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் ரூ.5 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட உலர்தீவன விற்பனை மையம் திறக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர் ராஜமாணிக்கம் தலைமை தாங்கினார். விழாவில் திருச்சி மாவட்ட கலெக்டர் பழனிச்சாமி கலந்து கொண்டு உலர் தீவன விற்பனை மைய கிடங்கை திறந்து வைத்து விவசாயிகளுக்கு மானிய விலையில் வைக்கோல் வழங்கினார். மேலும் பெண்களுக்கு நாட்டுக்கோழிகளை வழங்கினார்.

விழாவில் தாசில்தார் மலர்கொடி, ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் மங்களேஸ்வரி, சந்திரசேகர், ஊராட்சித் தலைவர் ஆனந்தன், மாவட்ட குழு உறுப்பினர் ருக்மணிதுரைராஜ், கால்நடை மருத்துவ துணை இயக்குநர் வரதராஜன், வாழ்வாதார திட்ட தொகுப்பு களப்பணியாளர் முத்தமிழ்ச்செல்வி மற்றும் வார்டு உறுப்பினர்கள், ஊராட்சி செயலாளர் ரங்கநாதன் ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

அடையாள அட்டைகள்

விழாவில் 150 பயனாளிகளுக்கு தலா 45 கோழிகள் வீதம் வழங்கப்பட்டதுடன், கோழிக்கூண்டுகள் உள்பட பல்வேறு உபகரணங்களும் வழங்கப்பட்டன. மேலும் விவசாயிகளுக்கு கிலோ ரூ.2 வீதம் வைக்கோல்கள் வழங்குவதற்கான அடையாள அட்டைகளும், வைக்கோல்களும் வழங்கப்பட்டன. முன்னதாக தண்டலைப்புத்தூர் கால்நடை மருத்துவர் கார்த்திக் வரவேற்றார். முடிவில் டாக்டர் சதீஷ்குமார் நன்றி கூறினார்.

**அலங்கியம் வாய்க்கால் தூர்வாரும் பணியை பாசன சங்கத்திற்கு வழங்க வேண்டும் முதல்–அமைச்சருக்கு விவசாயிகள் கோரிக்கை**




அமராவதி பழைய ஆயக்கட்டு பாசன வாய்க்கால் தூர்வாரும் பணிகளை பாசன சங்கத்திற்கு

வழங்க வேண்டும் என்று அலங்கியம் பாசன சங்கத்தை சேர்ந்த விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து தமிழக முதல்–அமைச்சருக்கு அந்த சங்கத்தின் சார்பில் அனுப்பி உள்ள மனுவில் கூறியிருப்பதாவது:–

<u>அமராவதி பழைய ஆயக்கட்டு</u>

திருப்பூர் மாவட்டம் அமராவதியின் பழைய ஆயக்கட்டு பாசனத்தில் ஆண்டிற்கு ஒருமுறை நெல் சாகுபடி செய்யப்படுகிறது. அலங்கியம் பகுதியில் நெல் சாகுபடிக்கு பிறகு கிணற்று நீரை கொண்டு, கரும்பு மற்றும் மக்காச்சோளம் ஆகிய பயிர்கள் சாகுபடி நடைபெறும். அலங்கியம் வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிடும் போது, தொட்டியந்துறை மற்றும் இரங்காடு ஆகிய பகுதியில் வாய்க்காலுக்கு இருகரைகளிலும் விவசாயம் நடைபெறும்.

இந்த வாய்க்காலில் நீண்ட தொலைவிற்கு பாலம் இல்லாததால் தண்ணீர் வரும்போது வாய்க்காலை கடந்து மறு கரைக்கு செல்ல முடிவதில்லை. விவசாய தொழிலாளர், குறிப்பாக பெண்கள் வாய்க்காலை கடந்து சென்று விவசாய வேலைகளில் ஈடுபடுவது மிகவும் சிரமமாக உள்ளது. பயிர்களுக்கு தேவையான உரமூட்டைகளை கொண்டு செல்வதும், அறுவடை நேரத்தில் பயிர்களை மறு கரைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால், அவைகளை சுமந்தபடி வாய்க்கால் தண்ணீரில் இறங்கித்தான் செல்லவேண்டிய நிலை இருந்து வருகிறது. இதனால் விவசாயிகளும் விவசாய தொழிலாளர்களும் அதிக சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். எனவே வாய்க்காலின் குறுக்கே சிறு பாலம் கட்டுவதற்கு பொதுப்பணித்துறை மூலம் நடவடிக்கை வேண்டும்.


<u>தூர்வாரும் பணி</u>

அலங்கியம் வாய்க்கால் நீண்ட நாட்களாக தூர்வாரப்படவில்லை. இதனால் பாசனத்திற்கு போதுமான அளவு தண்ணீர் கிடைக்காமல் சிறு, குறு விவசாயிகள் சிரமப்படுகின்றனர். எனவே அலங்கியம் வாய்க்காலை தூர்வார வேண்டும்.

தூர்வாரும் போது அந்த பணியை தனியாருக்கு வழங்காமல் பாசன சங்கத்திற்கு வழங்க வேண்டும். விவசாயிகள் நலன் கருதி, லாபத்தை எதிர்பார்க்காமல், முழுமையான பணியை பாசன சங்கம் மேற்கொள்ளும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

**டெல்டா, நீலகிரியில் திடீர் மழை**




தஞ்சை:

தமிழகத்தில், தென்மேற்கு பருவ மழைக்காலம் விரைவில் தொடங்க உள்ளது. இதையொட்டி, தமிழகத்தின் ஒரு சில இடங்களில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. நேற்றும் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. தஞ்சையில் வல்லம், நாஞ்சிக்கோட்டை, கும்பகோணம் நகர் பகுதிகளில் நேற்று அதிகாலை பரவலான மழை பெய்தது. திருவாரூர் நகரில் அதிகாலை 4 மணி முதல் 5 மணி வரை லேசான மழையும், அரியலூர் மாவட்டத்தில் அதிகாலை 3 மணி முதல் 6 மணி வரை மிதமான மழையும் பொழிந்தது.நீலகிரி மாவட்டத்திலும் பரவலாக மழை பெய்தது.

**இயற்கை நமக்கு தரும் சத்துக்கள்**




அன்னாசி பழம், பப்பாளி, மாம்பழம், கொய்யா, மஞ்சள், பரங்கிக்காய், நெல்லிக்காய், கேரட், பொன்னாங்கண்ணி கீரைகளில் ‘வைட்டமின் ஏ’ சத்துக்கள் அதிகம் உள்ளன. இவற்றை அளவோடு உட்கொண்டால் மாலைக்கண் நோய் தீரும். சருமம் பொலிவு பெறும்.

**வைட்டமின் பி-** வாழைப் பூ, சாம்பல் பூசணி, நாட்டு தக்காளி, முருங்கைக்காய், முருங்கைக் கீரை, முட்டைகோஸ், காலிபிளவர், பட்டாணி, கடலை, மாதுளை போன்றவற்றில் ‘வைட்டமின் பி’ சத்துக்கள் நிறைந்து உள்ளன. இவற்றை அளவோடு உண்டால், நமது உடல் வலிமைக்கும் நரம்புகள் ஊட்டத்துக்குள் வலு சேர்க்கும். மேலும் வயிற்றுப் புண், வாய்ப் புண், ரத்தசோகை, கை-கால் செயலிழத்தலை விரைவில் குணமாக்கும்.

**வைட்டமின் சி-** எலுமிச்சை, அன்னாசி, பப்பாளி, நாட்டு தக்காளி, நெல்லிக்காய், ஆரஞ்சு, முட்டைகோஸ், காலிபிளவர், வெள்ளை முள்ளங்கி மற்றும் புளிப்பு சுவை உடைய காய்கள் மற்றும் கீரைகளில் ‘வைட்டமின் சி’ சத்துக்கள் நிறைந்துள்ளன. இவை ஒவ்வொருவரின் நோய் எதிர்ப்பாற்றலுக்கும் ரத்த சுத்திகரிப்பு செய்வதற்கும் அதிகளவில் உதவுகிறது. மேலும் சளி பிடித்தல், வயிற்றுப் புண் (அல்சர்), குடல் புண் உள்ளவர்கள் இதுபோன்ற ரத்த சத்து மிகுந்த உணவுகளை அதிகமாக சாப்பிடக்கூடாது.

**வைட்டமின் டி-** முட்டை, மீன், தேங்காய், கடலை, பட்டாணி, துவரை, உருளைக்கிழங்கு, சர்க்கரைவள்ளி கிழங்கு, எண்ணெய் வித்துக்கள் உள்ள பொருட்களில் 'வைட்டமின் டி' சத்து அதிகம் உள்ளது. இந்த சத்துக்கள் நமது உடலுக்கு ஊட்டத்தையும் வலிமையையும் கொடுக்கும். இந்த சத்து குறைவதால்தான் நமக்கு தோல் வியாதிகள் வருகின்றன. தேங்காய், உருளைக்கிழங்கு போன்றவற்றை 20 வயதுக்கு உட்பட்டவர்கள் அதிகமாகவும், 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் குறைவாகவும் எடுத்து கொள்ள வேண்டும். வைட்டமின் இ- முருங்கைக்காய், முருங்கை விதை, கடலை, வேர்க்கடலை, முந்திரி பருப்பு, தேங்காய், பேரீச்சம்பழம், பதநீர் போன்றவற்றில் 'வைட்டமின் இ' சத்துக்கள் அதிகம். இவை நமது உடல் ஆரோக்கியத்துக்கும், உயிர் சத்தான விந்துவையும், கரு தரித்தலுக்கான சினை முட்டைகளையும் அதிகரிக்க இந்த சத்து மிகவும் முக்கியம். வயதுக்கு வராத பெண்கள், கருத்தரிக்காத பெண்கள் மற்றும் ஆண் மலடுகளுக்கு இந்த சத்து மிக அவசியம்.

**வைட்டமின் கே-** வாழைப் பூ, அத்திக்காய், மாதுளை, வாழைத் தண்டு, நெல்லிக்காய், கொய்யாப் பிஞ்சு, மொச்சை, புளிச்ச கீரை போன்றவற்றில் 'வைட்டமின் கே' சத்துக்கள் அதிகம் காணப்படும். நமது உடலில் நம் உடலில் இந்த சத்துக்கள் குறைந்தால் ரத்தம் நீர்த்து போய், ரத்த ஒழுக்கு ஏற்படும். இந்த சத்து ரத்தம் உறைதலுக்கு மிக அவசியம். இரும்பு சத்து- முருங்கைக் கீரை, கரிசலாங்கண்ணி கீரை, அவரை, வாழைப்பூ, கத்திரி பிஞ்சு, நாட்டு தக்காளி, வெள்ளரி, வெண்டை மற்றும் பாகற்காயில் இரும்பு சத்துகள் அதிகம். இந்த சத்து நம் உடலில் குறைவதால் ரத்தம் கெடுவதுடன் தோல் வியாதி ஏற்படுகிறது. அடிக்கடி சளி பிடித்தல் மற்றும் ரத்த சோகை ஏற்படும். ஆனால், அதுவே அளவுக்கு மீறியிருந்தால் வயிற்றுக் கோளாறு மற்றும் சிறுநீரகக் கோளாறுகள் ஏற்படும்.

**மாவு மற்றும் சர்க்கரை சத்து-** நமது அன்றாட உணவில் சேர்க்கப்படும் சர்க்கரை, வெல்லம், கிழங்கு வகைகள், வெங்காயம், அரிசி, கோதுமை, பால், பருப்பு மற்றும் தானிய வகைகளில் இந்த 2 சத்துகளும் அதிகம் உள்ளன. நமது உடலில் சேரும் கொழுப்பு சத்துகளை கரைந்து போகாமல் தடுப்பதுடன், விரதம் இருப்பவர்களும் நோய் தாக்குதலுக்கு ஆளானவர்களை காப்பதும் இந்த 2 சத்துகளும்தான்.

**புரத சத்து-** சோயா மொச்சை, பாதாம் பருப்பு, முந்திரி, வேர்க்கடலை, கொட்டை பருப்பு, பால், பாலாடை, மீன், முட்டை போன்றவற்றில் புரத சத்து அதிகம். இவை உணவை ஜீரணிக்க உதவுவதுடன், ஜீரண நீர் வளர்ச்சிக்கும் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கவும் உதவுகிறது. இவை குறைவதால் தசைகள் இளைத்து போவதுடன், சத்து குறைவு காரணமாக உடலில் வீக்கம் ஏற்பட்டு ஊதி பெரிதாகிறது.

**கொழுப்பு சத்து-** வெண்ணெய், மிருக கொழுப்புகள், தேங்காய், எண்ணெய், கடலை எண்ணெய், பருத்தி எண்ணெய், சோயா எண்ணெய், சோள எண்ணெய் போன்றவற்றில் கொழுப்பு சத்துக்கள் அதிகம். இந்த சத்துக்கள் நீரில் கரையாமலும், எண்ணெய் போன்ற பிசுக்களினால் ஆன தனித்தன்மை பெற்றது.

**சுண்ணாம்பு சத்து-** நம் உடலின் தாதுப் பொருட்களில் மிக முக்கியமான சத்து சுண்ணாம்பு சத்தாகும். இவை முருங்கை கீரை, ராகி, கோதுமை, நண்டு, ஆட்டு இறைச்சி, பீட்ரூட், வெங்காயம், வெண்டைக்காய் மற்றும் கேரட் போன்றவற்றில் மிகுதியாக இருக்கும். நமது உடலில் எலும்புகள், பற்கள், நரம்பு மற்றும் தசைகளின் சரியான இயக்கத்துக்கும், ரத்தம் உறையவும் சுண்ணாம்பு சத்து அவசியம் தேவைப்படுகிறது.

**சாம்பல் சத்து-** முருங்கை, ராகி, கோதுமை, நண்டு, வெங்காயம் மற்றும் வெண்டைக் காயில் சாம்பல் சத்து அதிகம் உள்ளது. நமது உடலில் உள்ள

ரத்தத்தின் அமில, காரத்தன்மையைக் கண்காணிப்பது சாம்பல் சத்தாகும். எலும்புகளுடன் சுண்ணாம்பு சத்து சேருவதில் சாம்பல் சத்து பெரும்பங்கு வகிக்கிறது.

**உப்பு சத்து-** நம் உடலில் சேரும் நீர் சத்துக்கு அடுத்தபடியாக மிக முக்கிய பங்கு வகிப்பது உப்புதான். ஆனால், இவற்றை நாம் அளவோடு எடுத்து கொள்ள வேண்டும். இவை நம் உடலில் அதிகமானால், கழுத்துக்கு முன்புற வீக்கமும் உடல் தளர்ச்சியும் ஏற்படும்.

**நீரிழிவு நோயை போக்கும் முட்டை**




மனிதர்களை தாக்கும் முக்கிய நோய்களில் நீரிழிவும் ஒன்று. இந்தநோய் தற்போது சாதாரணமாகி விட்டது. அதில் டைப் 2 நீரிழிவு நோய் ஒருவரது வாழ்க்கை முறை பழக்க வழக்கங்களான உடற்பயிற்சி, சத்துணவு போன்றவைகளால் ஏற்படுவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. அதே நேரத்தில் அதிக அளவு கொழுப்பு சத்துகளால் உடலில் குளுக்கோஸ் குறைபாடு ஏற்பட்டு அதன் மூலம் இந்தநோய் ஏற்படுவதாகவும் பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் தற்போது முட்டை சாப்பிட்டால் டைப் 2 நீரிழிவு நோய் தாக்கம் குறையும் என புதிய ஆய்வு தெரிவிக்கிறது. முட்டையில் உள்ள கொழுப்பு சத்து உடலில் சுரக்கும் குளுக்கோஸ் அளவை சரி சமப்படுத்தி சீரமைத்து நீரிழிவு நோய் வராமல் தடுக்கிறது.

கிழக்கு பின்லாந்து பல்கலைக்கழகத்தின் இருதயநோய் தடுப்பு பிரிவை

சேர்ந்த நிபுணர்கள் 432 பேரிடம் ஆய்வு நடத்தினார்கள். அதில் வாரத்துக்கு ஒரு முட்டை சாப்பிடுபவர்களை விட வாரத்துக்கு 4 முட்டை சாப்பிடுபவர்களுக்கு டைப் 2 நீரிழிவு நோய் தாக்குதல் குறைவாக இருந்தது. அதன் மூலம் முட்டை சாப்பிட்டால் நீரிழிவு நோய் தாக்கம் குறையும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

**நுரையீரலுக்கு உகந்த பீன்ஸ்**




நமது உடலில் உள்ள முக்கியமான பாகங்களில் நுரையீரலும் ஒன்று. இதில் உள்ள மூச்சுப்பைகளே சுவாசத்தில் பங்கு வகிக்கின்றன. நுரையீரலில் ஏற்படும் பாதிப்புகள் உயிருக்கு உலைவைக்கும் அளவுக்கு ஆபத்தானவை. குறிப்பாக புகைபிடிக்கும் பழக்கமும், சுற்றுச்சூழல் மாசுகளும் நுரையீரலை அதிகமாக பாதிக்க வாய்ப்புகள் உள்ளன. ஏற்கனவே அத்தகைய பாதிப்பு இருப்பவர்களுக்கும் வியாதியின் வளர்ச்சி தடுக்கப்பட்டு நல்ல நிவாரணம் கிடைப்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

கர்ட்டின் தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆய்வாளர்கள் ஜப்பானில் உள்ள மருத்துவமனைகளில் இதற்கான ஆய்வுகளை நடத்தி இதை கண்டுபிடித்து உள்ளனர். தினமும் குறைந்த பட்சம் 50 கிராம் அளவுக்கு குறையாமல் பீன்ஸ் உணவுகளை சேர்த்துக் கொள்வது சிறந்த பலனைத் தரும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**தொழுநோய் நீக்கும் அந்தரத்தாமரை**




தமிழகத்தின் நீர்,குளம், குட்டைகள், ஏரிகளில் கூட்டம் கூட்டமாக வளரும் சிறு செடியினம். இலைகள் எதிர் அடுக்கில் இணையாக அமைந்திருக்கும். இளம் பச்சை நிறத்தில் அமைந்திருக்கும் இலைகளுக்கு காம்புகள் கிடையாது. இதன் வேர்கள் மண் மீது படாமல் நீரிலேயே கூஞ்சம் போன்று மிதக்கும். பார்பதற்கு தாமரை போன்று இருப்பதால் ஆகாயத்தாமரை என்றும் அழைப்பர்.

உடலில் ஏற்படும் வெப்பத்தை குறைக்கும். தாதுக்களின் எரிச்சலை தணிக்கும். இதன் இலையை அரைத்து கரப்பான், தொழுநோய்புண் மீது வைத்து கட்டி வர விரைவில் ஆறும். சிலருக்கு ஆசனவாயில் எப்பொழுதும் நமைச்சல் இருந்துகொண்டே இருக்கும். இவர்கள் ஆகாயத்தாமரையின் இலைகளை தண்ணீர்விடாமல் மைய அரைத்து கோவணத்தில் வைத்து ஆசனவாயில் வைத்து கட்டி வர நமைச்சல் நீங்கும். மூலநோயும் தீரும்.

இதன் முழு செடியும் சுட்டு சாம்பலாக்கி அதை எச்சில் தழுப்பு, கரப்பான் மீது பூசி வர அவை நீங்கும். இளைச்சாற்றை புதியதாக எடுத்து 25மிலி சாற்றுடன் 5மிலி தேன் கலந்து காலை, மாலை 5 நாட்கள் குடிக்க மார்பக நோய்கள் போகும். நீர்சுருக்கு மூலம், சீதபேதி இருமல் உள்ளவர்கள்

இதை மூன்று நாட்கள் மூன்று வேளை குடித்தால் குணம் ஏற்படும்.

இலைளை எடுத்து சுரசம் செய்து அதனுடன் பன்னீர் சர்க்கரையும் கூட்டி இருமல் இரைப்பிருமலுக்கு கொடுத்தால் குணமடையும். உள் மூலம் உள்ளவர்கள் இதன் இலையை தண்ணீரில் கொதிக்க வைத்து அந்த ஆவியை 10நிமிடம் ஆசனவாயில் பிடித்து வர மூல முளை வேருடன் நீங்கும். காலையில் எழுந்தவுடன் சிலருக்கு கண் எரிச்சல், ஏற்படும். பகலில் அது அதிகமாகும். கண்களிலிருந்து சிலநேரம் நீர்வடியும்.

கண் விழித்தால் எப்படி இருக்குமோ அதே போன்று எப்பொழுதும் அவதிபடுபவார்கள். இவர்கள் வாரம் ஒரு முறை தலைக்கிட்டு குளித்து வர உடல்சூடு, கண்ணெரிச்சல் மூல நோய்கள் நீங்கும்.

இலையை சாறு பிழிந்து சரசஞ்செய்து அதை தெளித்த பிறகு 50மிலி வீதம் எடுத்து அதில் சிறிது தேன் கலந்து குடித்தால் பெண்கள் நோய் தீரும். இலையை காடிநீரில் வேகவைத்து நீரை பிழிந்து விட்டு திப்பியை எடுத்து குட்டத்தால் ஏற்பட்ட புண், கரப்பான் அழுகிரந்தி இலைகளை வைத்து கட்டினால் குணமாகும். கைப்பிடி அரிசி சிறிது தேங்காய்பால் அந்தரத்தாமரை இலை ஒன்று சேர்த்து சமைத்து சீதபேதிக்கு கொடுத்தால் தீரும்.

மூட்டுபூச்சிகள் உள்ள இடங்களில் இதன் இலையை போட்டு வைக்க இதிலிருந்து உண்டாகும் சாறு காற்றில் மூட்டுபூச்சிகள் ஒழியும். அதன் பெருமைபற்றி

அழுகிரந்தி குட்டம் அடர்ந்த கரப்பான்
புழுவுறுமந் கூடுமுதற்பேகும் அழகாரும்
இந்திநீ லக்கருக்கண் ஏந்திழையே எப்பொழுதும்

அந்த ரத் தாமரையே லம்

என்று கூறுகிறார். அகத்தியர் பெருமான். பார்ப்பதற்கு அழகுடன் விளங்கும் அந்தரத்தாமரையானது நீரிலே மிதக்கும் தாவரம் என நினைத்து அலட்சியம் செய்துவிடாமல் அது முன்னோர்களால் கண்டெடுக்கப்பட்ட அரிய மூலிகை என்பதை உணர்ந்து அளவோடு பயன்படுத்தி வளமோடு நலமோடு வாழ்வோம்.

ஆகாயத்தாமரை தைலம்

தண்ணீரில் மிதப்பது என்றவுடன் வெங்காயத்தாமரையை சிலர் ஆகாயத்தாமரையாக நினைத்துக்கொள்வார்கள். ஆனால் இரண்டும் வேறுவேறு குணங்களும் அமைப்பும் கொண்டவை.

ஆகாயத்தாமரையின் சாறு அரைலிட்டர் நல்லெண்ணெய் 1லிட்டர் எடுத்து இரண்டையும் கலந்து காய்ச்சவேண்டும் நீரின் சடசடப்பு நீக்கியவுடன் மெழுகு போன்று உருவாகும். அதில் கிச்சலிகிழங்கு, சந்தனத்தூள் வெட்டிவேர் கஸ்தூரி மஞ்சள் சாம்பிராணி ஆகியவற்றை தனித்தனியாக 10கிராம் அளவில் பொடித்து போட்டு ஒன்றாக கலந்தவுடன் இறக்கி வடித்து கொள்ளவேண்டும். இதுவே ஆகாயத்தாமரை தைலம் எனப்படும்.

**விவசாயத்தை அரசு புறக்கணிப்பதால் நச்சு கலந்த துரித உணவை நாடும் நிலை ஏற்பட்டது**

மேட்டுப்பாளையம், : மத்திய மாநில அரசுகள் தொடர்ந்து விவசாயத்தை புறக்கணிப்பதால் மக்கள் நச்சு தன்மை கலந்த துரித உணவுகளை நாடும் நிலை ஏற்பட்டுள்ளதாக தமிழக விவசாய சங்க தலைவர் சிவசாமி குற்றம் சாட்டினார். இலவச மின்சாரம் மற்றும் விவசாய கடன் தள்ளுபடி போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி கோவை மாவட்டத்தில் கடந்த

1971 ஆம் ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் கைதாகினர். கைது செய்யபட்ட விவசாயிகளை விடுவிக்க கோரி 1972 ஆம் ஆண்டு கோவை மாநகரத்தில் அப்போதைய தமிழக விவசாய சங்கதலைவர் நாராயனசாமி நாயுடு தலைமையில் மாபெரும் கட்டை வண்டி போராட்டம் நடைபெற்றது.இந்த போராட்டம் காரணமாக கைது செய்யபட்ட விவசாயிகள் விடுதலை செய்யப்பட்டனர். இந்த போராட்டம் நடந்து 43 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி அப்போது போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்ற விவசாயிகளுக்கு பாராட்டு விழா மேட்டுப்பாளையம் அருகே உள்ள தாயனூரில் தமிழக விவசாய தலைவர் டாக்டர் சிவசாமி தலைமையில் நடைபெற்றது.

அப்போது தமிழக விவசாய சங்க தலைவர் சிவசாமி கூறியதாவது: மத்திய மாநில அரசுகள் கடந்த 40 ஆண்டுகளாக விவசாயத்தை புறக்கணிப்பதால் விவசாய விளை பொருட்கள் பொதுமக்களுக்கு கிடைக்காமல் பணம் படைத்தவர்களுக்கு செல்கிறது. எனவே விலைவாசி உயர்வு நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. இதனால் பொதுமக்களுக்கு விவசாய உணவு பொருட்கள் கூடுதல் விலை வைத்து விற்பதால் நச்சு தன்மை கலந்த துரித உணவுகளை மக்கள் நாடும் நிலை ஏற்பட்டுள்ளது. வனவிலங்குகள் தொல்லை, புதிய போர்வெல் சட்டம், கரும்பு டன் ஒன்றுக்கு நான்கு ஆயிரம் ரூபாய் வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் ஆகஸ்ட் 15ந்தேதி மாநிலம் தழுவிய மறியல் போராட்டம் நடத்தப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி**

ஈரோடு, : பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து சற்று அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் நீர்மட்டம் நேற்று 66.02 அடியாக இருந்தது.

கடந்த ஏப்ரல் மாத இறுதியில் அணையின் நீர்மட்டம் 45 அடியாக இருந்த நிலையில் கடந்த ஒன்றரை மாதமாக அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு முற்றிலும் நிறுத்தப்பட்டு குடிநீர் தேவைக்காக மட்டுமே திறக்கப்பட்டுள்ளது. மேலும், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மாவட்டத்திலும், வடகேரளாவிலும் கோடை மழை கணிசமாக பெய்ததால் அணைக்கு நீர்வரத்து சராசரியாக ஆயிரம் கனஅடி வீதம் இருந்தது. இதன் காரணமாக தொடர்ந்து அணையின் நீர்மட்டம் உயர்ந்து வந்தது.

மாவட்டத்தின் உயிர்நாடியாக கருதப்படும் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவது விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில் தென்மேற்கு பருவமழை சீசன் போது கிடைக்கும் நீர்வரத்தை விவசாயிகள் மிகவும் எதிர்பார்த்துள்ளனர். தற்போது நீலகிரியில் அவ்வப்போது தென்மேற்கு பருவமழை சீசன் துவங்கி மழை பெய்து வருவதால் அணைக்கு நீர்வரத்து சற்று அதிகரித்துள்ளது.

ஊட்டி, கோத்தகிரி, குன்னூர் போன்ற பகுதிகளில் பெய்து வரும் மழையால் பவானி ஆற்றின் வழியாகவும், கூடலூர், மோயாறு, மசினகுடி பகுதியில் பெய்யும் மழையால் மோயாறு பள்ளத்தாக்கு வழியாகவும் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று அணைக்கு 1592 கனஅடி வீதம் நீர்வரத்து இருந்த நிலையில் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக மட்டுமே 150 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நீர்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவமழை சீசன் துவங்கி நீர்வரத்து அதிகரித்திருப்பது விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்து மழைப்பொழிவு அதிகரிக்க வேண்டும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.